# TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்

மலர்- 7 ✧ இதழ்-5 ✧ டிசம்பர் 2024

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**



தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org


## தொழில் வளம் பெருகட்டும்! தொழிலாளர்கள் நலன் பெருகட்டும்!!
## ஆங்கிலப் புத்தாண்டே வருக! புதுப்பொலிவைத் தருக!

**2024** டிசம்பர் 14, 15 மற்றும் 16 தேதிகளில் திருச்சியில் நடந்து முடிந்திருக்கிற மாநில பொதுக்குழு தொழிற்சங்க செயல்பாடுகளில் நம்மை அடுத்தகட்ட நகர்வுக்கு அழைத்து சென்றிருக்கிறது.

நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை வென்றெடுப்ப தற்கு உள்ளேயும், வெளியேயும் போராட வேண்டிய காலம் என்பதை உணர்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் உள்ளோம் என்பதை அறிந்து கொள்வோம்.

கோரிக்கை வைத்தால் வெற்றியாகிவிடும் என்பது பழைய காலம் என மாறியிருக்கும் மாற்றம் நிறைந்த காலம், போராடினால் தான் கிடைக்கும் என்பதும் சில கோரிக்கைகள் கோரிக்கையாகவே தொடரும் என்பதும் உண்மையாகிக் கொண்டிருக்கிறது.

01.12.2023க்கான ஊதிய உயர்வு ஒப்பந்த பேச்சுவார்த்தை வாரியத்தின் முன்வரைவு ஒற்றைத் தாளில் (A4) தரப்பட்டதே தொழிலாளர் வர்க்கத்தை நசுக்கும் நவீனத்தன்மை, வேலைப்பளு பேசுவதற்கு வற்புறுத்தலில்தான் 3 மாத காலம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டது, அலவன்ஸுக்கு கமிட்டி அமைத்ததோடு சரி, காலியிடங்களை ஒழிப்பதும், பணியிட மாற்றமென Redeploymentல் யாரை எங்கு வேண்டுமானால் அனுப்பலாம் என்பதும், BP No.2 மூலம் எல்லாவற்றிற்கும் அரசின் ஒப்புதலை பெற வேண்டும் என்ற நிலை என்பதும் மின்சார வாரியத்தில் 65 ஆண்டு காலத்திற்கு மேலான தொழிற்சங்க செயல்பாடுகளை கேள்விக்குறியாக்கியது.

வாரியத்துடன் பேசுகிறோம், ஒத்து வரவில்லை என்றால் விலகி நிற்கிறோம் தொடர்ந்து போராடுகிறோம் என்பதுதான் நமது தார்மீக கொள்கையாக இருக்கிறது. களத்தில் விபரங்களைக் கொண்டு செல்வோம், கரம் கோர்த்து குரலெழுப்புவோம், வெற்றிக்கு வித்திடும் புதிய ஆண்டாக 2025 பிறக்கட்டும்.

மூன்று நாட்கள் திருச்சியில் நடைபெற்றுள்ள மாநில பொதுக்குழு, தமிழகம் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகை தந்த பொதுக்குழு பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டம், 2021 டிசம்பரில் 2022-2024ம் ஆண்டிற்கான

நிர்வாகிகள் தேர்வு, தொழிலுக்கும் தொழிலாளர்களுக்கும் உள்ள பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து முடிவெடுத்து கடந்த மூன்றாண்டுகள் செயல்பட்டதுபோல அடுத்தகட்ட பணி 2025-2027ற்கான துவக்கம் தான் 2024 டிசம்பர் 14, 15, 16ல் நடைபெற்ற பொதுக்குழு.

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் இணைப்பு செய்துள்ள மத்திய தொழிற்சங்கமான UTUCயின் தமிழக தலைவர்களும், அகில இந்திய பொதுச்செயலாளரும், மின்வாரிய சகோதர தொழிற்சங்கத் தலைவர்களும், பொதுக்குழு தொடக்க விழாவில் கலந்து கொண்டு வாழ்த்தி இருப்பது நம்மின் செயல்பாட்டில் இன்னொரு மைல் கல்லாக அமைந்துள்ளது.

அகில இந்திய அளவிலும், தமிழக அளவிலும் தொழிலுக்கும், தொழிலாளர்களுக்கும் உள்ள பிரச்சினைகளை தமிழக மற்றும் அகில இந்திய UTUC தலைவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

மின்வாரியத்தில் நிலவும் சூழ்நிலையும், நமக்கு முன்னே உள்ள கோரிக்கைகளும், தனித்தனியே இயங்குவதும், தேவைப்படும்போது கூட்டுப் பேர சக்தியை வெளிப்படுத்தும் மிகப் பெரிய ஆயுதமாக நம்மிடையே ஒற்றுமை நிலவுகிறது என்பதையும், CITU, INTUC, Er.Sangam, தொழிலாளர், பொறியாளர் ஐக்கிய சங்கம், NLO, Er. Union போன்ற மின்வாரிய சகோதர தொழிற்சங்கத் தலைவர்களும் எடுத்துக் கூறி பொதுக்குழுவில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் வெற்றியாகட்டும் என வாழ்த்தியிருக்கிறார்கள்.

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷனுடன் இணைப்பு செய்துள்ள வரைவாளர் சங்கம், நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் சங்கம், ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கம் ஆகியவற்றின் சார்பாக வாழ்த்தி மகிழ்வை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

மின்வாரிய பிரிப்பிற்கு பின்னர் நடைபெறும் நிர்வாக செயல்பாடுகளை உற்றுக் கவனித்து வருகிறோம். புதிய வாரியத் தலைவர் பணியேற்புக்கு பின்னர் தேங்கிக் கிடந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வரப்படுவதை வரவேற்கிறோம், வாழ்த்துகிறோம், காலியிடங்களைப் பூர்த்தி செய்வதும், விபத்தில்லா வாரியமாக கொண்டு செல்ல வேண்டியதும், கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதும் தலையாயக் கடமையாக மேற்கொண்டு செயல்படுத்துவார்கள் என்ற நம்மின் எதிர்பார்ப்பு நிறைவேறும் என நம்புவோம்.

**அனைவருக்கும்**
**கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள்**
**ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகள்**
**தைத்திருநாள் நல் வாழ்த்துகள்.**




**– ஆசிரியர்**

# மாநில பொதுக்குழு அறிக்கை

நாள் : 18.12.2024

**வணக்கம் தோழர்களே!**

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில பொதுக்குழு கூட்டம் 2024 டிசம்பர் 14, 15 மற்றும் 16 தேதிகளில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஹோட்டல் அஜந்தாவில் சிறப்புடன் நடைபெற்றது.

14.12.2024 காலை 11.00 மணிக்கு TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷனின் இரட்டைக் கோபுர செங்கொடியை பொதுச்செயலாளர் அ. சேக்கிழார் பொதுக்குழு உறுப்பினர்களின் பலத்த கரகோஷங்களுக்கிடையே ஏற்றி வைத்தார்.

கோவை தோழர் காமராஜ் அவர்களின் திருவுருவ படத்திற்கும் மற்றும் போராட்டங்களில் உயிர்நீத்தத் தியாகிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் தோழர். கோவை காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தை UTUC அகில இந்திய பொதுச்செயலாளர் தோழர். அசோக் கோஷ் அவர்கள் திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து மாநில நிர்வாகிகள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினார்கள்.

பொதுக்குழு நிகழ்ச்சிகள் மாநில தலைவர் தோழர். S. மணிகண்டன் அவர்கள் தலைமையுரையுடன் தொடங்கியது.

தோழர். B. இந்து தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார்கள்.

தோழர். J.L. பாஸ்டின்ராஜ் மாநில பொருளாளர் இரங்கல் தீர்மானம் முன் மொழிந்ததை தொடர்ந்து ஒரு நிமிடம் பொதுக்குழு அஞ்சலி செலுத்தியது.

UTUC அகில இந்திய பொதுச்செயலாளர் தோழர். அசோக் கோஷ், UTUC தமிழக தலைவர்கள் மற்றும் சகோதர தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் TNEBEF தலைமை நிர்வாகிகள் மேடையில் அமர்ந்திருக்க TNEBEF பொதுச் செயலாளர் பொதுக்குழுவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

வரவேற்புரைக்கு பின்னர் UTUC அகில இந்திய பொதுச்செயலாளர் தோழர். அசோக் கோஷ் பொதுக்குழுவினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு UTUC தலைவர் தோழர் V. இராஜேந்திரன், துணைத்தலைவர் தோழர் A. ஜீவானந்தம் மற்றும் மின்வாரிய சகோதர தொழிற்சங்கத் தலைவர்கள் COTTEE - CITU பொதுச் செயலாளர் தோழர். S. இராஜேந்திரன் INTUC பொதுச் செயலாளர் திரு. T.V. சேவியர், பொறியாளர் சங்கம் பொதுச் செயலாளர் திரு. S. சம்பத்குமார், தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்க மாநில தலைவர் திரு. C. கண்ணன், NLO மாநில தலைவர் திரு. மு.க. செல்வராஜ், பொறியாளர் யூனியன் பொதுச் செயலாளர் திரு. R. கோவிந்தராஜ், வரைவாளர் சங்க பொதுச்செயலாளர் திருமதி. M. மங்கையர்க்கரசி, நிர்வாக பணியாளர்கள் மற்றும் அலுவலர் சங்க மாநில தலைவர் திரு. S.A. பாண்டியன், TNEBREOS பொதுச் செயலாளர் தோழர் P. சுடலை ஆகியோர் பொதுக்குழுவை வாழ்த்திப் பேசினார்கள்.

மாநில பொருளாளர் நன்றி கூறிய பின்னர் தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.

மதியம் 3.00 மணியளவில் மாநில தலைவர் பிரதிநிதிகள் அமர்வை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பொதுச் செயலாளர் 2022 - 2024ஆம் ஆண்டிற்கான வேலை அறிக்கையையும், பொருளாளர் 2022-2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையையும், வெளியீட்டு செயலாளர் 2022-2024ஆம் ஆண்டிற்கான TNEBEF NEWS 2022 - 2024ஆம் ஆண்டிற்கான ஆண்டு, ஆயுள் சந்தா மற்றும் மாதாந்திர வெளியீடு குறித்து அறிக்கையையும் பொதுக்குழு உறுப்பினர்கள் முன் வைத்து உரையாற்றினார்கள்.

இரவு 8.00 மணிக்கு முதல் நாள் அமர்வு நிறைவுற்றது.

இரண்டாம் நாள் அமர்வில் தோழர். N. முத்தையா தோழர் A. அருணாசலம் தோழர். K. செல்வராஜு, தோழர் K. ஞானகுரு, தோழர் M. பாரதி ஆகியோர் தலைமைக் குழுவாக செயல்படவும், தோழர் G.K. பாலகிருஷ்ணன் தோழர் S. சதீஷ்சங்கர் தோழர் S. புகழேந்தி, தோழர். N.D.S. அலெக்சாண்டர், தோழர் S. சரத்குமாரி ஆகியோர் தீர்மானக்குழுவாக செயல்படவும், தோழர் P. நாகராஜ் தோழர் A. கண்ணாதுரை தோழர் R. யோகசித்ரா ஆகியோர் கூட்ட நடவடிக்கை குழுவாக செயல்படவும், தோழர் V. சிவராணி தோழர் I. லியோபால், தோழர் B. இந்து, தோழர் R. சிவசெல்வம், தோழர் K. பஞ்சமூர்த்தி ஆகியோர் தகுதி ஆய்வு குழுவாக செயல்படவும் மாநில தலைமையின் சார்பில் பொதுச்செயலாளரின் அறிவிப்புக்கு பின்னர் தலைமைக்குழு உட்பட அனைத்து குழுக்களும் பொறுப்பேற்று பொதுக்குழுவினை வழிநடத்தினர்.

தமிழ்நாடு மின்சார வாரிய நிர்வாக பணியாளர்கள் மற்றும் அலுவலர் சங்க மாநிலத் தலைவர் திரு. A. மாணிக்கம், பொதுச்செயலாளர் திரு. T. ஈஸ்வரன் ஆகியோர் இரண்டாம் நாள் அமர்வில் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார்கள்.

பொதுச்செயலாளரின் அறிக்கை மீது 15.12.2024 காலை 10.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையிலும், 16.12.2024 காலை 9.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை பிரதிநிதிகள் விவாதம் நடைபெற்றதில் 78 ஆண் தோழர்களும், 8 பெண் தோழர்களும் விவாதத்தில் கலந்து கொண்டார்கள்.

இரண்டு நாட்களும் பிரதிநிதிகள் விவாதத்திற்கு இடையே தீர்மானக் குழுவினரால் பிரதிநிதிகளிடமிருந்து பெறப்பட்ட தீர்மானங்களை பொதுக்குழு உறுப்பினர்களின் முன்னே வைத்து ஒப்புதல் பெற்று பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மதிய உணவு இடைவேளைக்கு பிறகு 3.00 மணி முதல் 5.30 மணி வரை பொதுச் செயலாளர் பதிலுரை அளித்த பின்னர் 2025 - 2027ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளை UTUC அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் அசோக் கோஷ் வாழ்த்தி உரையாற்றினார்.

தேர்வு செய்யப்பட்டுள்ள மாநில நிர்வாகிகளின் சார்பாக மாநில தலைவர் நன்றி தெரிவித்த பின்னர் மூன்று நாட்கள் நடைபெற்ற பொதுக்குழு இனிதே நிறைவுற்றது.

## 2025 - 2027ஆம் ஆண்டிற்கான நிர்வாகிகள்

| | |
|---|---|
| தலைவர் | **J.L. பாஸ்டின்ராஜ்** |
| செயல் தலைவர் | **S. ராசாங்கம்** |
| பொதுச் செயலாளர் | **அ. சேக்கிழார்** |
| துணை பொதுச் செயலாளர்கள் | **S. மணிகண்டன், K. நாராயணமூர்த்தி** |
| பொருளாளர் | **N. பழனி** |
| அமைப்பு செயலாளர் | **G.K. பாலகிருஷ்ணன்** |

## மாநில உப தலைவர்கள்:

1. **A. அருணாசலம்**
2. **R. ஜெயராமன்**
3. **N. முத்தையா**
4. **M. சுப்பிரமணியம்**
5. **K.R. சுப்பிரமணியம்**
6. **A. கண்ணாதுரை**
7. **C. வெள்ளைக்கண்ணு**
8. **C. இராமதாஸ்**
9. **R. சக்திவேல்**
10. **A. ஜோசப்**
11. **K. சிவசுப்புபாண்டியன்**
12. **S. பார்த்தசாரதி**
13. **A. வேணுகோபால்**
14. **P. சுடலை**
15. **S. மோகன்**
16. **T. ஈஸ்வரன்**
17. **K. ஞானகுரு**
18. **A.M. மணி**
19. **S. கண்ணையன்**
20. **E. சக்திவேல்**
21. **B. வீரமணி**
22. **V. பழனிசாமி**
23. **H. சத்யநாராயணன்**

## மாநில செயலாளர்கள் :

1. **K. செல்வராஜ்**
2. **R. மூக்கையா**
3. **S. சதீஷ்சங்கர்**
4. **R. சிவசெல்வன்**
5. **N.D.S. அலெக்சாண்டர்**
6. **R.G. லெனின் சீனிவாசன்**
7. **S. சக்திவேல்**
8. **K. பஞ்சமூர்த்தி**
9. **A.தாவீது**
10. **R. சேகர்**
11. **G. அங்குராஜ்**
12. **M. பாரதி**
13. **V. சிவராணி**
14. **S. சரத்குமாரி**
15. **M. மங்கையர்க்கரசி**
16. **A. ஸ்ரீமதி**
17. **N. கலைச்செல்வி**

## மாநில இணைச் செயலாளர்கள் :

1. **K. சம்பத்** சென்னை (தலைமையகம்)
2. **V. இரமேஷ்** சென்னை (தலைமையகம்)
3. **S. வீரமுத்து,** சென்னை மையம்
4. **P.முரளி,** சென்னை மேற்கு
5. **K. தயாநிதி,** செங்கல்பட்டு
6. **K. ஜெயசங்கர்,** கள்ளக்குறிச்சி
7. **S. கோகுல்தாஸ்,** தர்மபுரி
8. **B. செந்தில்,** வேலூர்
9. **A. காதர் இப்ராஹீம்,** கோவை தெற்கு
10. **L. முருகவேல்,** கரூர்
11. **K.R.K. சுப்ரமணியம்,** சிவகங்கை
12. **S.P. துரைபாண்டியன்,** விருதுநகர்
13. **P. நாகராஜ்,** கோவை தெற்கு
14. **K. துரைராஜ்,** உடுமலை NCES
15. **R. கிருஷ்ணன்,** எமரால்டு
16. **R. பிரகாசம்,** MTPS
17. **S. புகழேந்தி,** சேலம்
18. **P. செல்வம்,** பெரியார் மின் நிலையம்
19. **D. சாமுவேல் ஜான்சன்,** திருப்பூர்
20. **R. காமராஜன்,** தேனி
21. **R. அப்புசாமி,** கோவை P&C
22. **S. உதயா,** சென்னை GCC
23. **S. முருக அருள்,** திருவாரூர்
24. **S. பாலசுப்பிரமணி,** திண்டுக்கல்
25. **K. தாமஸ் செல்வன்,** மேட்டூர் பணிமனை
26. **A. ராஜேந்திரன்,** கோவை வடக்கு
27. **A. செந்தில்குமார்,** சென்னை
28. **K.P. ஸ்ரீனிவாசன்,** கோவை மாநகர்
29. **A. அருண்பிரசாத்,** திருவண்ணாமலை
30. **R. மகேஷ்குமார்,** கோவை தெற்கு
31. **M. ராஜேந்திரன்,** கோவை GCC
32. **A. சேதுராமன்,** மதுரை GCC
33. **M. ராஜா,** தஞ்சாவூர்
34. **S. செந்தில்குமார்,** திருச்சி மாநகர்
35. **G. பாலசுப்ரமணியன்,** விருதுநகர்
36. **A. அருள்செல்வன்,** திருப்பூர்

37. **M. செல்வம்,** கோவை தெற்கு
38. **P. பிரகாஷ்,** கோவை வடக்கு
39. **S. செல்லப்பன்,** சிவகங்கை
40. **P. பானுமதி**, சென்னை வடக்கு
41. **S. கார்த்திகா,** சென்னை மையம்
42. **K. பவானி,** சென்னை தெற்கு (2)
43. **R. சரஸ்வதி,** சென்னை தெற்கு (1)
44. **B. ஷாகிரா,** மேட்டூர்
45. **K. தேவிகா,** சென்னை தலைமையகம்
46. **J. ஜெசிந்தாமேரி,** திருச்சி மாநகர்
47. **M. கவிதா,** கோவை மாநகர்
48. **N.ஜோஸ்பின் ராணி,** கோவை தலைமை அலுவலகம்
49. **A.உமா மகேஸ்வரி,** பெரம்பலூர்
50. **K. புவனேஸ்வரி,** நாகப்பட்டினம்
51. **P. சிவசங்கரி,** திருவண்ணாமலை

**மண்டல செயலாளர்கள் :**

1. **L. சவரிமுத்து**, சென்னை மண்டலம்
2. **M. ஜானகிராமன்,** காஞ்சிபுரம் மண்டலம்
3. **R. செந்தில்வேலன்,** விழுப்புரம் மண்டலம்
4. **K. காளிதாஸ்,** திருச்சி மண்டலம்
5. **M. தண்டபாணி,** கரூர் மண்டலம்
6. **U. கனகராஜ்,** தஞ்சாவூர் மண்டலம்
7. **R. வீரசேகர்,** மதுரை மண்டலம்
8. **S. இராமச்சந்திரன்,** திருநெல்வேலி மண்டலம்
9. **A. முருகவேல்,** கோவை மண்டலம்
10. **R.P.A. நந்தகுமார்,** ஈரோடு மண்டலம்
11. **J. இராஜராஜன்,** வேலூர் மண்டலம்
12. **V. பாண்டியன்,** திருவண்ணாமலை மண்டலம்

## TNEBEF NEWS

| | |
|---|---|
| வெளியீட்டு செயலாளர் | **A. செந்தில்குமார்** |
| இணை வெளியீட்டு செயலாளர் | **K. தயாநிதி** |
| அலுவலக செயலாளர் | **M. கோபால்** |

**தீர்மானங்கள்**

1) **புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்திட தமிழக அரசை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.**

2) **ஈட்டிய விடுப்பை (SLS) பணமாக்கும் நடைமுறையை நிறுத்தி வைத்துள்ளதை பணமாக்கிட அனுமதிக்க வேண்டுமென தமிழக அரசை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.**

3) **மின்சார வாரியத்தில் உள்ள 60,000க்கு மேற்பட்ட காலிப்பணியிடங்கள் அடிப்படை பதவிகள் Field Assistant, Junior Assistant, Typist, Assessor, Technical Assistant, Assistant Draughstman and Assistant Engineer உட்பட உடனடியாக நிரப்பிட மின்சார வாரியத்தையும், தமிழக அரசையும் இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.**

4) **ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நடைமுறைப்படுத்துவதை கைவிட வேண்டுமென மின்சார வாரியத்தையும், தமிழக அரசையும் இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.**

5) **தேர்வு செய்து பணியமர்த்தப்படாமல் உள்ள கேங்மேன் நியமன உத்தரவு 5000 பேருக்கும் வழங்கிட வேண்டுமென மின்சார வாரியத்தையும், தமிழக அரசையும் இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.**

6) **கேங்மேன் பணியாளர்களை கள உதவியாளர் பணியிடங்களில் பணியாற்ற பதவி மாற்றம் செய்திடவும், ஊர் மாறுதல் மேலும் 10% அளித்திடவும் மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.**

7) **BP No. 2ஐ முழுமையாக ரத்து செய்திடவும், ஒவ்வொரு அனுமதிக்கும் அரசுக்கு கோப்பு அனுப்புவதை நிறுத்தவும் வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

8) மின்விபத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழப்பவர்களுக்கு அரசு அறிவித்தபடி ரூ. 10,00,000 இழப்பீட்டு தொகை நிதி வழங்கிட வேண்டுமென தமிழக அரசையும், மின்சார வாரியத்தையும் இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

9) புதிதாக அமைக்கப்பட்டுள்ள 33, 66, 110, 230 KV துணை மின்நிலையங்களுக்கு உரிய பதவி அனுமதி அளித்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

10) கணக்கீட்டு பிரிவில் IA, RS, ATO, Sr. ATO பதவி உயர்வுகளை உடனடியாக அளித்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

11) கணக்கீட்டு பிரிவில் Inspector of Assessment. Revenue Supervisor மற்றும் Assessment Officer பதவி உயர்வு வழங்கும்போது கணக்கீட்டு பணியை (Assessment) செய்திட வேண்டும் என நிபந்தனை விதிக்காமல் பதவி உயர்வு வழங்கிட வேண்டுமென மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

12) கணக்கீட்டு பணியாளர் வசூல் மையத்தில் ரூ. 4000க்கு மேல் ரொக்கமாக வசூல் செய்யக் கூடாதென உத்தரவிட்டுள்ளதை நிறுத்தி வைக்குமாறு இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

13) மின்கட்டண வசூல் மையங்களை குறைப்பதை நிறுத்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

14) கணக்குப் பிரிவில் Accounts Supervisor பதவி உயர்வினை உடனடியாக வழங்கிட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

15) Accounts Supervisor Seniority List வழங்கப்படாமல் உள்ளதை உடனடியாக வழங்கிட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

16) சமூக ஊடகங்கள் வழியாக மின்சார தொழிலாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு எதிராக வரக்கூடிய தேவையற்ற குற்றச்சாட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை மேற்கொள்வதை தவிர்த்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

17) DGRG 20 இலட்சத்திலிருந்து 25 இலட்சமாக உயர்த்தியுள்ள அரசாணையை மின்சார வாரியத்தில் அமல்படுத்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

18) பயணச் செலவினை திரும்ப பெறுவதில் 75% சதவிகிதமாக குறைத்துள்ளதை தமிழக அரசு 100% சதவிகிதமாக மாற்றி உத்தரவிட்டுள்ளதை மின்சார வாரியத்தில் அமல்படுத்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

19) 1.12.2023 முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தைக் குழுவை அமைத்திடவும், இடைக்காலத்தில் ஊதிய உயர்வுக்கான நிவாரணமாக மாதம் ரூ. 5000/- வீதம் வழங்கிடவும் மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

20) 1.12.2019 முதல் வழங்கியுள்ள ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் 1.12.2019க்கும் 16.05.2023க்குமிடையே பணியில் சேர்ந்த சுமார் 10,000க்கு மேற்பட்டோருக்கு வழங்காமல் உள்ள 6% ஊதிய உயர்வை உடனடியாக வழங்கிட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

21) வேலைப்பளு பேச்சுவார்த்தை துவக்கிடவும், அலவன்ஸ் கமிட்டி பேச்சுவார்த்தை நடத்திடவும் உத்திரவிட வேண்டுமென மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

22) ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்திடவும், பகுதி நேரப் பணியாளர்களை பணியிலமர்த்திடவும் வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

23) வாரிசு வேலை விண்ணப்பங்களை விரைவாக பரிசீலித்து பணி வழங்கிட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

24) **Department Test, Accounts Test** தேர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கி வந்த ஊக்கத்தொகை **(Increment)** நிறுத்தி வைத்துள்ளதை மீண்டும் வழங்கிட வேண்டுமென மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

25) விருப்ப மாறுதல் உத்தரவு பெற்றுள்ள தொழிலாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் ஆகியோரை பணி விடுவிப்பு செய்து ஊர் மாறுதலில் பணியேற்க உத்தரவிட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

26) **JA (Adm)** உள்முகத் தேர்வு செய்திட உத்தரவிட வேண்டுமென மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

27) இளநிலை உதவியாளர் பதவிக்கு தமிழக அரசில் உள்ளதுபோல 10ஆம் வகுப்பு கல்வித் தகுதியை தமிழக மின்சார வாரியத்திலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

28) மின்சார வாரியத்தில் காலியிடங்களாக உள்ள தட்டச்சர் பணியிடங்களை நிரப்பிட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

29) **Technical Assistant (Electrical), Assistant Engineer (Electrical)** பதவிகளுக்கு உள்முகத் தேர்விற்கு விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் விரைவாக உத்தரவு வழங்கிட வேண்டுமாய் மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

30) உள்முகத் தேர்வில் **TA** மற்றும் **AE** பதவிகளுக்கு **ECE** படித்தவர்களுக்கு சதவிகிதத்தை அதிகப்படுத்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

31) பண்டக சாலை காப்பாளர் 2ம் நிலை உள்முகத் தேர்விற்கு பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களை பரிசீலித்து உடனடியாக தேர்வு செய்திட வேண்டுமாய் இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

32) **Mechanical & Civil** பணிகளில் உள்ள பொறியாளர்கள் பதவி உயர்வுகளை உடனடியாக வழங்கிட மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

33) கணக்கீட்டு பணிக்கும், களப்பணிக்கும் **Mobile App** பயன்படுத்தி பணி செய்ய வற்புறுத்தும் நிலைகைவிட வேண்டும் (அ) அகன்ற தொடுதிரை கொண்ட **Tab** போன்ற சாதனங்கள் வழங்கிட வேண்டுமாய் இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

34) தொழிற்பழகுநர் **(Apprentice)**க்கு தேர்வாகி பயிற்சி பெறுபவர்களை நிரந்தர பணியாளர்கள் செய்யும் பணியை குறிப்பாக கணக்கீட்டுப் பணியை செய்திட வேண்டுமென வழங்கியுள்ள உத்தரவை நிறுத்தி வைத்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

35) பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மின்கட்டமைப்பை சரிசெய்து மின்சாரம் வழங்கிட பணி செய்த தொழிலாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்கிட வேண்டுமாய் இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

36) தொழிலாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் ஒரே காலத்தில் ஊதிய உயர்வு அளித்திடவும், அலுவலருக்கு **10** ஆண்டுகளுக்கு ஒருமுறை என கடந்த ஒப்பந்த நேரத்தில் உத்தரவிட்டுள்ளதை ரத்து செய்திடவும் மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

37) மதுரை **GCC** களப்பணியாளர் பதவி உயர்வினை உடனடியாக வழங்கிட உத்தரவிட வேண்டுமென மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

38) மேட்டூர் பணிமனையை தொடர்ந்து இயக்கி மின்தளவாடங்கள் உற்பத்தி செய்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

39) **01.12.2019**க்கும் **31.5.2023**க்குமிடையே ஓய்வு பெற்றுள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு இரண்டாவது தவணை வழங்கப்படாமல் உள்ளதையும், **1.12.2019** ஊதிய உயர்வு காலத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கு

போனஸ் வழங்கப்படாமல் உள்ளதையும் உடனடியாக அளிக்கும்படி மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

40) தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கையுறை மற்றும் Rain coat தரம் உள்ளதாக வழங்குமாறு மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

41) துணை மின்நிலையங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு இரண்டாம் மற்றும் நான்காம் கணக்குகளில் விடுப்பு அளித்திட வேண்டுமென மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

42) சென்னை போன்ற மாநகரங்களில் இயங்கும் மின்தடை நீக்கப்பணி மையங்களுக்கு (Fuse of Call Center) போதுமான பணியாளர்களும், வாகனங்களும் அளித்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

43) மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் தொழிலாளர்களின் தாய், தந்தையர் பெயரையும் இணைத்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

44) விபத்தில்லா மின்சார வாரியமாக மாற்றிடுவதற்கான முயற்சி மேற்கொள்ள காலியிடங்களை நிரப்பிடவும், பாதுகாப்பு சாதனங்கள் முறையாக வழங்கிடவும், முறையான மேற்பார்வையில் பணி செய்ய வைத்திடவும் வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

45) மருத்துவரீதியிலான பணி ஓய்வு 53 வயதிலிருந்து 55 வயதாக மாற்றி (ஓய்வு பெறும் வயது 60தாக உள்ளதால்) உத்தரவிட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

46) MBA, MSW, DLL போன்ற கல்வித் தகுதிகள் உள்ளவர்களுக்கு Labour Welfare Officer பதவி வழங்கி மண்டலத்திற்கு ஒருவரை நியமித்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

47) சென்னை உயர்நீதிமன்றம், மதுரை உயர்நீதிமன்ற கிளை மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கக்கூடிய மின்சார வாரியத்திற்கு எதிரான வழக்குகளை விரைவாக முடிவுக்கு கொண்டு வர BL சட்டப்படிப்பு படித்துள்ளவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ள மண்டலத்திற்கு ஒருவரை நியமித்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

48) கோவை தலைமைப் பொறியாளர் மண்டல அலுவலகத்திற்கு கூடுதல் பணியாளர்கள் கேட்டு அனுப்பப்பட்டுள்ள முன்வரைவினை பரிசீலித்து கூடுதல் பதவிகள் அனுமதித்திட வேண்டுமென இப்பொதுக்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

49) TNEBEFல் பொது நல நிதியம் உருவாக்கி முதியோர்களுக்கு உதவுதல், மாணவர்களுக்கு படிப்புக்கு உதவுதல் மற்றும் இயற்கை பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு உதவுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டுமென பொதுக்குழு தீர்மானிக்கிறது.

50) வெளியீட்டு செயலாளருக்கு உதவுவதற்காக இணை வெளியீட்டு செயலாளர் பதவியை தற்காலிகமாக உருவாக்கிடுவதென இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

51) பொதுச்செயலாளருக்கு உதவுவதற்காக துணைப் பொதுச்செயலாளர் 2 பதவிகள் தற்காலிகமாக உருவாக்கிடுவதென இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

52) தொழிற்சங்க பயிற்சி வகுப்பு 3 மாதத்திற்கொருமுறை அல்லது வருடத்திற்கு 2 முறை நடத்திடுவதென இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

53) நிர்வாக நலன் கருதி எம்ப்ளாயீஸ் பெடரேஷனில் ஏற்கனவே உள்ள செயற்குழு, பொதுக்குழுவுடன் கூடுதலாக நிர்வாகக்குழு ஒன்றை உருவாக்கிடுவதென இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

54) செயற்குழு 2 மாதத்திற்கொருமுறை நடத்தப்பட்டு வருவதில் அவசியம் கருதி தேவைப்படும்போது 3 மாதத்திற்கொருமுறை நடத்திடுவதென இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

(அ. சேக்கிழார்)
பொதுச்செயலாளர்

| நான்மணிக்கடிகை பாடல். 27 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை! |
|---|---|

## பாடல் (29) கோல்நோக்கி வாழும் குடியெல்லாம்!

**கோல்நோக்கி வாழும் குடியெல்லாம்; தாய்முலைப்**
**பால்நோக்கி வாழும் குழவிகள்; - வானத்**
**துளிநோக்கி வாழும் உலகம்; உலகின்**
**விளிநோக்கி இன்புறூஉம் கூற்று.**

**கருத்துரை:**

நாட்டில் வாழும் குடி மக்கள் எல்லாம் ஆள்வோரின் செங்கோல் தவறாத நல்லாட்சியை எதிர்பார்த்து வாழ்கிறார்கள்!

பிறந்த குழந்தைகள் எல்லாம் தம் பசிக்குத் தாய்ப்பாலை நம்பியே உயிர் வாழ்கின்றன!

இந்த உலகத்தில் வாழும் அனைத்து உயிர்களும் வானத்திலிருந்து பொழிகின்ற மழையைச் சார்ந்தே உயிர் வாழ்கின்றன!

ஆனால், கூற்றுவனோ தன் கடமையை நிறைவேற்ற உயிர்களின் இறப்பை எதிர்பார்த்தே காத்திருக்கிறான்!

**அருஞ்சொற்பொருள்:**

குடியெல்லாம் = குடிமக்கள் எல்லோரும்; கோல் நோக்கி = ஆள்வோரின் நேர்மை தவறாத ஆட்சியை எதிர்பார்த்து; வாழும் = உயிர் வாழ்வர்; குழவிகள் = குழந்தைகள் எல்லோரும்; தாய் முலைப்பால் நோக்கி = தம் பசிக்குத் தாய்ப்பாலை நம்பியே; வாழும் = உயிர் வாழ்கின்றன; உலகம் = உலகத்தில் வாழும் உயிரினங்கள் அனைத்தும்; வானத் துளி நோக்கி = வானின்று பொழியும் மழையைச் சார்ந்து; வாழும் = உயிர் வாழ்கின்றன; கூற்று = கூற்றுவன் (எமன்); உலகின் விளிநோக்கி = உயிர்களின் இறப்பை நோக்கி; (விளிதல் = இறத்தல்); இன்புறூஉம் = மகிழ்வான்.

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
**✆ : 9841446621 : 8939152361**
**tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# கோள்களும், மனிதனும்

**- சிவநாச்சியார்**

**பொ**துவாக மனிதனுக்கு உடல் இயங்குவதற்கும், உயிர் வாழவும் ஆற்றல் தேவைப்படுகிறது. அந்த ஆற்றல் நான்கு வகைகளில் அதாவது (1).உணவு (2). கோள்கள் (3). பூமியின் மையப்பகுதி (4). தியானம் மூலம் இவ்வாறு உடலுக்கு தேவையான சக்தி கிடைக்கின்றன. அவற்றில் கோள்கள் மூலம் கிடைக்கும் ஆற்றல் பற்றி சிந்திப்போம்.

இந்த ஆகாசத்திலே பிரபஞ்சத்திலே பல கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. இந்த நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒரு சூரியன். அவ்வாறு ஒரு சூரியன் தான் நம் உலகத்தை (பூமியை) சுற்றி வந்துகொண்டிருக்கிறது. அத்தகைய சூரியனையும் சூரியனைச் சுற்றி வருகின்ற மற்ற கோள்களையும் (கிரகங்களையும்) நாம் சூரிய குடும்பம் என்று அழைக்கிறோம்.

சூரியனிலிருந்தும் மற்ற கோள்களிலிருந்தும் எப்பொழுதும் ஒரு காந்த ஆற்றல் (அலை) வந்து கொண்டே தான் உள்ளது. கோள்களிலிருந்து வருகின்ற காந்த அலைகள் மனிதனுடைய எந்த எந்த பகுதியோடு (உறுப்புகளோடு) அதிகம் தொடர்பு கொள்கின்றன என்பதை தெரிந்து கொள்வோமா?

சூரியனிலிருந்து வருகிற அலை - எலும்புகளோடும் புதனிலிருந்து வருகின்ற அலை - தோல் மீதும் சுக்கிரனிலிருந்து வருகின்ற அலை நமது ஜீவசக்தியோடும் (ஆண்-விந்து, பெண்-நாதம்) சந்திரனிலிருந்து வருகின்ற அலை நமது இரத்த ஓட்டத்தோடும் செவ்வாயிலிருந்து வருகின்ற அலை நமது எலும்பிலுள்ள மஜ்ஜையோடும் குருவிலிருந்து வருகின்ற அலை - நமது மூளைச் செல்களோடும் சனியிலிருந்து வருகின்ற அலை நமது நரம்புகளோடும் ராகு - கேதுவிலிருந்து வருகின்ற அலை நமது ஓஜஸ் சக்தியோடும் (உயிர் சக்தி) தொடர்பு கொள்கின்றன.

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு''

எந்த பொருளும் எந்த தன்மையுடையதாக இருந்தாலும் அந்த பொருளின் உண்மையான பொருளை காண்பது தான் சிறந்த அறிவு ஆகும்.

**தி**றமையின்மை, அச்சம் இவையிரண்டும் தான் மனிதனு டைய கவலைகளைப் பெருக்கும் மன நிலைகளாகும்.

மனத்தின் விழிப்பு நிலை பிறழ்ந்த மயக்க நிலையும், இயற்கையின் ஒழுங்கமைப்பை அறியாமையும், எளிதில் தீர்வு காணத் தக்க கூர்ந்த அறிவை வளர்க்கும் சிந்தனைப் பயிற்சி யின்மையும் திறமையின்மையாகும்.

தவறான செயல்களின் விளைவைக் கண்டோ அல்லது தனது வாழ்வின் போக்கில் ஊறு (கெடுதல்) விளைவிக்கும் என்று கற்பனை செய்து கொண்டோ, துணிவிழந்து வருந்துதல் அச்சமாகும்.

திறமையின்மை, அச்சத்தால் கவலை உண்டாகிறது. கவலை யால் உடல் நலம் கெடுகின்றது. மேலும் வாழ்வே துன்பமாகவும், தோல்வியாகவும் அமைந்து விடுகிறது. இந்த கவலையை மனிதன் ஒழித்தேயாக வேண்டும். கவலையை ஒழிக்க வேண்டுமெனில் இயற்கையின் ஒழுங்கமைப்பை அறிய வேண்டும்; சிந்திக்கும் திறனைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை வேண்டும். முயற்சி வேண்டும். துணிவு வேண்டும்.

மாறாத இயற்கை விதிகளை உணர்ந்து கொள்ளல், சமுதாய ஒழுங்கமைப்பைப் புரிந்து, மதித்து வாழ்தல், தன்னிலை விளக்கம் (நான் யார்?) பெற்றுப் பிறவியின் லட்சியத்திற்கு ஒத்த இசைவான வகையில் வாழ்க்கை நடைமுறைகளை அமைத்துக் கொள்ளல் என்ற அறிவுடைமை வந்துவிட்டால் தானே சிக்கல்களைத் தோற்றுவித்துக்

கொள்ளாத தகைமை கிடைக்கும். சிக்கல்கள் இல்லாமல் போகவே, துன்பமுமில்லை, கவலையுமில்லை என்றாகி வாழ்வே ஓர் இன்பச் சோலையாக மாறிவிடும்.

''ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டும்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.''

துன்பம் வருமுன் விலக்கிக் கொள்வதும் வந்தபின் மனம் தளராமல் இருத்தலும் ஆகிய இவ்விரண்டின் வழியே செயலாற்றும் உறுதி குறித்து ஆராய்ந்தவரது கொள்கையாகும்.

**ந**ம் வாழ்க்கையில் எல்லா நேரங்களிலும் நமக்கு உதவக் கூடியது எது தெரியுமா? பொறுமையும் சகிப்புத்தன்மையும்.

பணம் கூட சில நேரங்களில் உதவாது. ஆனால் பொறுமையும், சகிப்புத்தன்மையும் தான் என்றுமே எல்லா நேரங்களிலும் கை கொடுக்கும். பொறுத்தார் பூமி ஆள்வார் என்று பெரியவர்கள் சொல்வதுண்டு.

வாழ்க்கையில் எது இருக்கிறதோ? இல்லையோ? பொறுமை, சகிப்புத்தன்மை இவ்விரண்டும் ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவை. பொறுமை உடையவர்கள் எப்போதும் தோற்றதாக சரித்திரம் இல்லை. அவசரப்படுவதினால் நாம் நம் நிம்மதியை இழக்கின்றோம். இவ்வுலகத்தில் நாம் ஒருவரை ஒருவர் சார்ந்து தான் வாழ்கிறோம்.

நாம் காலையில் எழுந்ததிலேயிருந்து இரவு உறங்கும் வரை எத்தனையோ, பொருட்களையும் விசயங்களையும் அனுபவித்து வாழ்கிறோம். அத்தனையும் நம்மால் மட்டுமே முடிந்தா? என்றால் இல்லையே!!! ஆனால் நாம் மற்றவரை சார்ந்து தான் வாழ்கிறோம்.

நாம் அனுபவிக்கும் அத்தனையும் மற்றவர்களின் உழைப்பால் நமக்கு கிடைத்தது. Enjoy பண்ணுகிறோம். அதே சமயம் சில பேரை எதிர்க்கிறோம். அவரை பிடிக்காது, இவர் மீது கோபம் வருகிறது என்று சொல்கிறோம்.

இன்னொருவரை சார்ந்து இருக்கும் நாம் இன்னொருவரின் செயல்களை சகித்துக்கொண்டு தான் வாழ வேண்டிய சூழ்நிலை உள்ளது. வெள்ளம் வரும்போது வளைந்து கொடுக்கும் நாணல் நிமிர்ந்து நிற்கும். எதிர்த்து நிற்கும் மரமோ வேரோடு வெள்ளத்தோடு போய்விடும். அதற்காக வளைந்தே பழக வேண்டும் என்பதில்லை. பொறுமை என்னும் காய் கசப்பாகத்தான் இருக்கும். ஆனால் அதன் பழம் மிகவும் இனிமையானது.

நாம் அடிக்கடி சொல்வதுண்டு பொறுமைக்கும் எல்லை உண்டு என்று.... உண்மையில் சொல்லப்போனால் பொறுமைக்கு எல்லை என்பதே கிடையாது. பொறுமை கடலினும் பெரியது. மகிழ்ச்சியை தருவது. தானங்களில் சிறந்தது நிதானம். இதுவும் கடந்து போகும் என்பது போல் பொறுமை, சகிப்புத்தன்மை கொண்டால் இதுவும் பழகிப் போகும்.

''இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை
யாரே மிகலூக்கும் தன்மை யவர்.''

தன் உள்ளத்தில் பகைமை தோன்றும் போது அதற்கு இடம் தராமல் அதற்கு எதிரே இருந்து வாழ வல்லவரை வெல்ல கருதும் ஆற்றல் உடையவர் யார் உள்ளார். குரோதமும் (கோபம்) விரோதமும் (பகை) தான் மனிதனை மனிதனாக வாழ விடுவதில்லை. கோபம் தான் பகை வளர்த்துக் கொண்டே செல்கிறது.

இந்த உலகத்தில் எல்லாமே உடனே நடக்க வேண்டும் என்று தான் ஆசைப்படுகிறோம். அதனால் தான் உடலுக்கு ஆரோக்கியமான உணவை பொறுமையாக சமைத்துக் கூட உண்ண நேரமில்லை. எல்லாமே Fast தான் Fast food போல.

**பொறுமையும், சகிப்புத்தன்மையும் வந்துவிட்டாலே நாம் சாதனையாளன் தான்.**

# தாமதமாகும் கணக்குப் பிரிவு பதவி உயர்வுகளும், எம்ப்ளாயீஸ் பெடரேஷனின் தொடர் முயற்சிகளும்

**த**மிழ்நாடு மின் வாரியத்தில் வருவாய் இழப்பை தடுப்பதிலும் வருவாயை பெருக்குவதிலும் பெரும்பங்கு வகிக்கும் கணக்கு பிரிவு பணியாளர்களின் பதவி உயர்வுகள் நீண்ட நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அலுவலர் மட்டத்தில் மட்டுமே கணக்கு பிரிவில் பதவி உயர்வுகள் கிடைக்கின்றன. முப்பது வருடங்கள் கணக்கு பிரிவில் பணி முடித்தவர்கள் கூட உரிய தகுதிகள் இருந்தும் இன்னும் (மூன்றாம் நிலை) கணக்கு மேற்பார்வையாளர் என்ற நிலையையே அடைந்து உள்ளனர் சுமார் 14 ஆண்டுகளாக பதவி உயர்வு இல்லாமல் இருந்து வருகின்றனர்.

கணக்கு பிரிவின் தொடக்க நிலைப் பதவிகளான இளநிலை உதவியாளர் பதவி பொறுப்புகள் பெருமளவு காலியாக உள்ளன. 2016-2018 தேர்வின்படி 250 இளிநிலை உதவியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. அதன்பிறகு நேர்முக தேர்வு நடைபெறவில்லை. தற்போது தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு அவர்களின் 30.09.2024 தேதியிட்ட கடிதத்தின்படி இளநிலை உதவியாளர் (கணக்கு) பதவிக்கான உள்முகத்தேர்வு கோரப்பட்டுள்ளது.

இளநிலை உதவியாளர் பதவிக்கான கல்வித்தகுதி இளங்கலை வணிகவியல் பட்டப்படிப்பு என்ற ஆனபின்பு இளநிலை உதவியாளர் பதவிகள் நிரப்பப்பட வாய்ப்பு இல்லாமல் போனது. வாரிசு வேலைக்கு வருபவர்கள் B.Com தவிர வேறு பட்டப்படிப்பு படித்திருந்தால் அவர்கள் நிர்வாக பிரிவில்தான் இனநிலை உதவியாளராக பணியேற்க இயலும்.

ஆகையால் பெருமளவு இளநிலை உதவியாளர் பணியிடங்கள் நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் இருந்ததால் பதவிகள் ரத்து செய்யப்பட்டு வரப்படுகின்றது.

இளநிலை உதவியாளரில் இருந்த உதவியாளர் (கணக்கு) பதவி உயர்வுகளுக்கான தகுதிகாண் அறிக்கை Suitability Report நீண்ட நாட்களுக்கு பிறகு கடந்த 22.11.2024 அன்றுதான் கோரப்பட்டுள்ளது. No.064569/420/G.58/G582/2024, dt.22.11.2024) 20.03.2024 (Lr Crucial date ஆக வைத்து மிகவும் தாமதமாக கேட்கப்பட்டுள்ளது. பதவி உயர்வுகள் வழங்கவதற்குள் அடுத்த Crucial date (20.03.2025) வந்துவிடும்.

ஆனால் கணக்கு உதவியாளரில் இருந்து கணக்கு மேற்பார்வையாளர் பதவி உயர்வு நீண்ட வருடங்களாக வழங்கப்படாமல் உள்ளது. கடந்த 21.06.2022 அன்று தகுதிகான் அறிக்கை (Suitability Report) கோரப்பட்டு பெறப்பட்டது (LR No.018279/258/G52/G521/2022 dt.21.06.2022) 2 வருடங்களுக்கு மேலாகியும் இதுநாள் வரையில் பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை.

வருவாய் பிரிவில் கணக்கு மேற்பார்வையாளர் பதவியை வைத்துத்தான் Work Load தொடர்பான பணி வரன்முறைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால் வேலைப்பளு ஒப்பந்தம் அமுலில் இருக்கும்போதே அனுமதிக்கப்பட்ட கணக்கு மேற்பார்வையாளர் பணியிடங்கள் வாரியத்தால் தன்னிச்சையாக ரத்து செய்யப்பட்டு வருகின்றன. ஏற்கனவே ERP நடைமுறைக்கு பிறகு செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருந்து ஒரு கணக்கு மேற்பார்வையாளர் மற்றும் ஒரு கணக்கு உதவியாளர் பதவி பொறுப்புகள் நடப்பு கணக்கு முடிக்கப்பட்டதால் (Drawing Account Closed) தமிழகம் முழுவதும் ரத்து செய்யப்பட்டது.

இது தவிர மத்திய அலுவலக காசுப்பிரிவில் பணியாற்றி வந்த உதவி கணக்கு அலுவலர் பணிணிடங்கள் உட்பட கணக்குப்பிரிவு பணியிடங்கள் ரத்து செய்யப்பட்டு (Re-deployment) வேறு இடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் ERP நடைமுறையே இல்லாத (Only Journal) வருவாய் பிரிவின் கணக்குப் பிரிவு பணியிடங்கள் ரத்து செய்யப்படுகின்றன. மொத்த பணியிடங்கள் ரத்து செய்ததில் 65% மேல் கணக்கு பிரிவு பணியிடங்கள் அதிலும் கணக்கு மேற்பார்வையாளர் பதவிகள் 70% சதவீதத்திற்கும் மேல்.

கணக்கு மேற்பார்வையாளரில் இருந்து உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கான தகுதிகாண் அறிக்கை 23.05.2024 அன்று கேட்கப்பட்டது. (LR No.004153/15/G.59/G.592/2020 dt/ .23.05.2024) ஏற்கனவே கேட்கப்பட்ட தகுதிகாண் அறிக்கையில் எஞ்சியிருந்த சுமார் 80 நபர்களின் பெயர்கள் விடுபட்டிருந்தது அதன்பிறகு திருத்தப்பட்ட தகுதிகாண் அறிக்கை 24.05.2024 (LR No.004153/15/G.59/G.592/2023-2 dt.24.05.2024) இதுநாள் வரையில் பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை.

கணக்கு பிரிவில் கணக்கு அலுவலர் உட்பட அலுவலர் பதவி உயர்வுகள் தாமதமின்றி வருகின்றன. உதவி கணக்கு அலுவலர் உள்முகத்தேர்வு தடையின்றி வருகின்றது.

கணக்கு பிரிவின் இந்த பதவி உயர்வு தேக்க நிலையை சரி செய்யவும் வரைமுறையில்லாமல் ரத்து செய்யப்படும் கணக்குப் பிரிவு பணியிடங்களை பாதுகாத்திடவும் எம்ப்ளாயீஸ் பெடரேசன் பெருமுயற்சி மேற்கொண்டு வருகின்றது.

ஒவ்வொரு செயற்குழுவிலும் கணக்கு பிரிவிற்கென்று பிரத்யோகமாக தீர்மானங்கள் நிறைவேற்றி அதன் அடிப்படையில் வாரியத் தலைவரையும் தலைமைப் பொறியாளர்/ பணியமைப்பு அவர்களையும் சந்தித்து நமது பொது செயலாளர் அவர்கள் கடிதம் கொடுத்து வலியுறுத்தி வருகின்றார்.

கணக்கு பிரிவிற்கென்று தனியாக கடந்த 15.03.2024 அன்று இணைய வழி வாயிலாக கூட்டம் நடத்தி அதில் தமிழகம் முழுவதும உள்ள கணக்குப் பிரிவு பணியாளர்களின் குறைகளை கேட்டறிந்தார் அதன் தொடர்ச்சியாக 18.03.2024 அன்று வாரியத் தலைவரை சந்தித்து கடிதம் வழங்கி கணக்கு மேற்பார்வையாளர் பதவி உயர்வுகள் வழங்கவும் கணக்கு பிரிவிற்கான Seniority list தயாரித்து உடனடியாக வழங்கவும் வாரியத்தலைவரிடம் வலியுறுத்தினார்.

வருவாய் பிரிவை வகைதெரியாமல் அழிக்க வழிதேடி வரும் இந்த நிர்வாகத்திற்கு எதிராக தொடர்ந்து எம்ப்ளாயீஸ் பெடரேசன் குரல் எழுப்பி வருகின்றது. நமது தொடர் நடவடிக்கையால்தான் 40 வயதுக்கு மேற்பட்ட கணக்கீட்டு பணி செய்து வந்த ஏராளமான மகளிர் பணிமாற்றம் (Cadre Conversion) செய்யப்பட்டு இளநிலை உதவியாளராக பணியேற்றுள்ளனர். வாரியத்தின் வருவாய் இழப்பைத் தடுக்கவும், வருவாயை பெருக்கவும் காரணமாக இருக்கும் கணக்கு பிரிவின் பணியாளரின் பதவி உயர்வு பணிபாதுகாப்பு தொடர்பான கோரிக்கைகள் வெற்றி பெற்று அவர்கள் பணி சிறக்கட்டும்.

**தே. சாமுவேல் ஜான்சன், B.Com, MBA.,**
மாநில இணைசெயலாளர்

## ✉ பெடரேஷன் கடிதங்கள் ☐

பெறுநர்: நாள் : 09.12.2024

**தலைவர்,**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை-2.

ஐயா,

**பொருள் : மேட்டூர் பணிமனை - பணியாளர்கள் - மின்வட்டங்களுக்கு பணியிட மாற்றம் - உத்தரவு - தொடர்பாக.**

**பார்வை : Letter No. 066551/G32/G32/2024-1 Dt. 04.12.2024.**

பார்வையில் கண்டுள்ளபடி மேட்டூர் பணிமனையில் பணியாற்றி வரும் களப்பணி மற்றும் நிர்வாகப் பணியாளர்களை அருகில் உள்ள இடங்களில் பணியிலமர்த்திட உத்தரவாகியுள்ளது.

மேற்கண்ட உத்தரவால் மேட்டூர் பணிமனையில் பணியாற்றுபவர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

மேட்டூர் பணிமனையில் போதுமான இயந்திரங்கள் இருந்தும் உற்பத்திக்கான தளவாடப் பொருட்களை அளித்து உற்பத்தி மேற்கொள்ளாமல் வெளியில் கொள்முதல் செய்வதால் இது போன்ற உத்தரவு வெளியாகியுள்ளது.

தலைவர் அவர்கள் இது குறித்து தலையிட்டு மேட்டூர் பணிமனையில் இருக்கக்கூடிய தொழிலாளர்களின் மனித உழைப்புத் திறனைப் பயன்படுத்தி உற்பத்தி மேற்கொள்ளவும், தற்சமயம் வெளியிட்டுள்ள உத்தரவை நிறுத்தி வைக்கவும் தகுந்த ஆவன செய்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(அ. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## மேட்டூர் பணிமனை - பணியாளர்கள் அருகிலுள்ள மின்வட்டங்களில் பணியமர்த்திட உத்தரவு

**TAMIL NADU POWER DISTRIBUTION CORPORATION LTD.,**
**(Erstwhile TANGEDCO)**
**Letter No. 066551/G.32/G.321/2024-1, Dated 04.12.2024**

From
**Thiru K. MUTHUKRISHNAN,**
Senior Personnel Officer/Labour (i/c),
Administrative Branch, 144, Anna Salai, Chennai - 600 002.

To
**The Superintending Engineer,**
Mettur Workshop Circle,
Mettur Dam.

Sir,

***Sub :*** Establishment - RWE & Provincial - Diversion of employees from Mettur Workshop Circle - Disposition list - Called for.

***Ref :*** CE/MM's U.O.No. CE/MM/SE/MM-I/EE/I/AEE4/F.MWS/D.50/2024, Dated : 03.12.2024.

*****

In the reference cited, the Chief Engineer/Materials Management/Chennai has sent a proposal which is approved by the Director/Distribution/TANGEDCO for temporaily diverting employees/staff with RWE post from the Office of the Mettur Workshop Circle to Mettur or nearby places for utilising them.

2) I therefore request you to send the details of disposition list of employees/staff in your circle early to this office for taking further necessary action.

Sd//***Dt. 04.12.2024

**K. MUTHUKRISHNAN,**

Senior Personnel Officer/Labour (I/C)

★★★

பெறுநர்: நாள் : 09.12.2024

**தலைவர்,**

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,

144, அண்ணாசாலை, சென்னை-2.

ஐயா,

**பொருள் : தலைமைப் பொறியாளர் (பகிர்மானம்) - திருச்சி மண்டலம் - 20.11.2024 நாளிட்ட உத்தரவு - தொடர்பாக.**

**பார்வை : (1) Per FB TANGEDCO Proceedings No. 10, Dt. 12.01.2024**

**(2) கு.எண். 686/36/நி.பி.ஆ/இ.நி.உ.உ/2024-1 நாள்: 20.11.2024.**

**(3) கு.ஆ.எண். 804081/நிபி1/உ4/கோவிஅ/2024 நாள்: 29.11.2024.**

பார்வை (2)ல் கண்டுள்ளபடி திருச்சி மண்டல தலைமை பொறியாளர் வெளியிட்டுள்ள உத்தரவினை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வருவதில்

பார்வை (1)ன்படி மின்சார வாரியத்தில் தொழிற்பயிற்சி பழகுவதற்காக (Apprentice) - பட்டப்படிப்பு படித்தவர்களை அமர்த்தியுள்ளதில் துணை மின்நிலையங்கள், சிறப்பு பராமரிப்பு பிரிவு மற்றும் மின்அளவு சோதனைக் கூடங்களில் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதில் கணக்கீட்டு பணிகளை மேற்கொள்வதற்காக அருகில் உள்ள பிரிவு அலுவலகங்களுக்கு அனுப்பிட மேற்பார்வை பொறியாளர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

1) பட்டயப் படிப்பு படித்துள்ளவர்களுக்கு MRT, Spl Mtce and Substationகளில் பயிற்சி அளித்தல் என்பது பயிற்சி காலத்தை பல பருவங்களாக பிரித்து 2 மாதம் அல்லது 3 மாதம் ஒவ்வொரு இடத்திலும் பயிற்சி அளிப்பதும், நிரந்தர பணியாளரின் பணித்திறன் அளவிற்கு பணியினை செய்திட அளிக்காமல் இருத்தலும்தான் தொழிற்பழகுவர் பயிற்சி அளிக்கக் கூடிய செயலாகும்.

2) கணக்கீட்டு பிரிவில் கணக்கெடுக்கும் செயல் என்பது மின்சார வாரியத்தின் மின்கணக்கு வழிமுறைகள் மற்றும் செயலி பயன்படுத்தும்விதம் ஏதும் அறியாதவர்களை இப்பணிக்கு

அனுப்புதல் என்பது வாரியத்திற்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும், அதுமட்டுமல்லாமல் நுகர்வோரிடத்தில் பல்வேறு சிரமங்களை (இன்று கணக்கீட்டு பணியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்) எதிர்கொள்ள வேண்டி வந்தால், வாரியத்தின் நற்பெயருக்கும் களங்கம் விளைவிக்கும்.

3) பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கும், கணக்கீட்டு பணிக்கும் சம்மந்தம் இல்லாததால் கணக்கீட்டு பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது மிகுந்த கவலை அளிக்கக் கூடியதாக உள்ளது.

4) பார்வை (3)ல் கண்டுள்ளபடி பெரம்பலூர் மேற்பார்வை பொறியாளர் கணக்கீட்டு பணி செய்ய உத்தரவிட்டுள்ளார்.

எனவே தலைவர் அவர்கள், தலைமை பொறியாளர் (பகிர்மானம்) திருச்சி அவர்களுக்கு தகுந்த உத்தரவிட்டு பார்வை (2)ல் கண்டுள்ள உத்தரவினை தற்காலிகமாக நிறுத்தி வைத்திட அறிவுறுத்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(அ. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

★★★

**அவசரம் / உடனடி நடவடிக்கை**

## தமிழ்நாடு மின்பகிர்மான கழகம்

தலைமைப் பொறியாளர் அலுவலகம்

பகிர்மானம் / திருச்சி மண்டலம்

**கு.ஆ.எண். 686/39/நி.பி.ஆ/இ.நி.உ.உ/2024-1 நாள்: 20.11.2024**

**பொருள் :** ***பட்டய படிப்பு தொழிற்பயிற்சி பழகுனர் - வாரிய உத்தரவின்படி மின்அளவி சோதனைக்கூடம், சிறப்பு பராமரிப்பு மற்றும் துணை மின்நிலையங்களில் பணியேற்பு செய்தது வாரிய உத்தரவின்படி கணக்கிட்டு பணி மேற்கொள்ள வாரிய உத்தரவு பிறப்பித்திட - அறிவுறுத்துவது - தொடர்பாக.***

**பார்வை : (Per) FB TANGEDCO Proceedings No. 10 dt. 12.01.2024.**

பார்வையில் கண்ட வாரிய ஆணையின் வாயிலாக பட்டய படிப்பு தொழிற்பயிற்சி பழகுனர் வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து மண்டல கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து மேற்பார்வை பொறியாளருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து அனைத்து மேற்பார்வை பொறியாளர்களும் அவர்களது வட்டத்தில் உள்ள சிறப்பு பராமரிப்பு, மின் அளவி சோதனைக்கூடம் மற்றும் காலியாக உள்ள துணை மின்நிலையங்களில் மேற்கண்ட பட்டய படிப்பு பயின்ற தொழிற்பயிற்சி பழகுனர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்கள்.

மேற்கண்ட சூழ்நிலையில் இணை மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் மேற்கண்ட பணியிடங்களில் பணிபுரியும் பட்டய படிப்பு தொழிற்பயிற்சி பழகுனர்களை உடனடியாக அப்பிரிவிலிருந்து பணிவிடுப்பு செய்து, தொழிற்பயிற்சி பழகுனர் இருப்பிடத்திற்கு

அருகிலுள்ள பிரிவு அலுவலகங்களில் காலியாக உள்ள கணக்கீட்டாளர் பதவிகளில் பணியமர்த்தி கணக்கிட்டு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள்.

எனவே, திருச்சி மண்டல கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து மேற்பார்வை பொறியாளர்களும் அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள மேற்கண்ட அலுவலகங்களில் பணிபுரியும் அனைத்து பட்டய படிப்பு பயிற்சி பழகுனர்களை உடனடியாக பணிவிடுவிப்பு செய்து தங்களது கட்டுப்பாட்டில் உள்ள பிரிவு அலுவலகங்களில் காலியாக உள்ள கணக்கிட்டாளர் பதவியின் கணக்கிட்டு பணியினை மேற்கொள்ள உத்தரவிட அறிவுறுத்தப்படுகிறது.

**தலைமைப் பொறியாளர்/பகிர்மானம்**
திருச்சி

**தமிழ்நாடு மின்பகிர்மான கழகம்**

மேற்பார்வை பொறியாளர் அலுவலகம்
பெமிபவ/பெரம்பலூர்

**கு.ஆ.எண். 804081/நி.பி.1/உ4/கோ.வி.அ/2024 நாள்: 29.11.2021**

பொருள் : ***பட்டய படிப்பு தொழிற்பயிற்சி பழகுனர் - வாரிய உத்தரவின்படி மின் அளவி சோதனை கூடம், சிறப்பு பராமரிப்பு மற்றும் துணை மின்நிலையங்களில் பணியேற்பு செய்தது - வாரிய உத்தரவின்படி கணக்கீட்டு பணி மேற்கொள்ள உத்தரவு வழங்குவது - தொடர்பாக.***

பார்வை :
1. **CE/P1/Chennai's Lr. No. GM.HRD/DGM/F/ Apprentice/D259/24 dt. 18.10.2024.**
2. **CE/P2/Chennai's Lr.N. GM.HRD/DGM/F.Apprentice/D.277/24 dt: 08.11.2024**
3. **This Office M.No: 554 to 554-12/ Adm/A.4/F.Apprentice/2024 dt: 21.10.2024**
4. **This Office M.No: 554-12/Adm/A4/F.Apprentice/2024 dt: 09.11.2024**
5. **த.பொ/பகிர்மானம்/திருச்சி அவர்களின் கு.அ.எண். 686/39/நிபி.ஆ/இ.நி.உ22024-1 நாள்: 20.11.2024.**

பார்வை (1) மற்றும் (2)-ல் கண்டுள்ள தலைமை பொறியாளர் பணியமைப்பு / சென்னை அவர்களின் கடிதத்தின் வாயிலாக 14 நபர்கள் பட்டய தொழில் பழகுநர் பயிற்சிக்கு தேர்வு செய்து பெரம்பலூர் மின்பகிர்மான வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து பார்வை (3) மற்றும் (4)-ல் கண்டுள்ள இவ்வலுவலக குறிப்பாணையின் வாயிலாக ஓராண்டு காலத்திற்கு 14 பட்டய தொழிற் பழகுநர்களுக்கு அலுவலகத்தில் பணிபுரிய ஆணை வழங்கப்பட்டது.

பார்வை (5)-ல் கண்டுள்ள தலைமை பொறியாளர்/பகிர்மானம்/திருச்சி அவர்களின் குறிப்பாணையின் வாயிலாக தெரிவித்துள்ளபடி ஏற்கனவே 110/230 கி.வோ. துணை மின்நிலையங்களில் பட்டய தொழில் பயிற்சி பழகுநர்களாக பணிபுரிய வழங்கப்பட்ட உத்திரவினை மாற்றி கீழ்கண்ட 10 பட்டய படிப்பு தொழிற்பயிற்சி பழகுநர்களுக்கு இருப்பிடத்திற்கு அருகில் உள்ள பிரிவு அலுவலகங்களில் காலியாக உள்ள கீழ்கண்ட பிரிவு அலுவலகங்களில் கணக்கிட்டு பணிகளை மேற்கொள்ள ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | கணக்கீட்டு பணிக்கு பணிபுரிய மாற்றி வழங்கப்படும் பிரிவு |
|---|---|---|---|
| 01. | S. அன்புக்கரசி | 33/11 கி.வோ. து.மி.நி/செந்துறை | இ&கா/கிராமியம்1/செந்துறை |
| 02. | R. இலக்கியா | 110/கி.வோ. து.மி.நி/அரியலூர் | இ&கா/கிராமியம்/அரியலூர் |
| 03. | R. சுரேந்தர் | 110/கி.வோ. து.மி.நி/பெரம்பலூர் | இ&கா/குரும்பலூர் |
| 04. | K. ரஞ்சித் | 110/33/கி.வோ. து.மி.நி/ஆண்டிமடம் | இ&கா/வடக்கு/ஆண்டிமடம் |
| 05. | K. தாரணி | 110/33/கி.வோ. து.மி.நி/மங்களமேடு | இகா/சின்னார்டேம் |
| 06. | L. முகமதுஜாகீர் | 110/33கி.வோ. து.மி.நி/ஜெயங்கொண்டம் | இ&கா/வடக்கு/ ஜெயங்கொண்டம் |
| 07. | C. சக்திவேல் | 230/கி.வோ. து.மி.நி/ஈச்சங்காடு | இ&கா/கிராமியம்-2/செந்துறை |
| 08. | S. விக்னேஷ்வரன் | 230/கி.வோ. து.மி.நி/பெரம்பலூர் | இ&கா/சிறுவாச்சூர் |
| 09. | K. கோவிந்தன் | 230/கி.வோ. து.மி.நி/பொய்யூர் | இ&கா/மருதையான் கோவில் |
| 10. | S. சுவேதா | 110/கி.வோ. து.மி.நி/சாத்தமங்கலம் | இ&கா/திருமானூர் |

மேற்கண்ட பட்டய தொழிற் பழகுநர்கள் தாங்கள் தற்போது பணிபுரியும் பிரிவிலிருந்து உடனடியாக பணிவிடுப்பு பெற்று தற்போது மாற்றி வழங்கப்பட்டுள்ள பிரிவில் பணிஏற்பு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

ஒப்பம் /★★★ (29.11.2024)
மேற்பார்வை பொறியாளர்
பெமிபவ/பெரம்பலூர்

பெறுநர்

உரிய பட்டய தொழில் பயிற்சி பழகுநர்கள் (வ.எண். 01 முதல் 06 மற்றும் வ.எண். 10) உதவி செயற்பொறியாளர்/இகா/அரியலூர், செந்துறை, ஆண்டிமடம், திருமானூர், நகர்/ஜெயங்கொண்டம், பெரம்பலூர், லப்பைக்குடிகாடு மூலமாக (வ.எண். 07, 08, 09) செயற்பொறியாளர்கள்/இயக்கம்/230 கி.வோ.து.மி.நி.ஈச்சங்காடு, பொய்யூர், பெரம்பலூர் மூலமாக.

நகல் : உதவி செயற்பொறியாளர்/இகா/அரியலூர், செந்துறை, ஆண்டிமடம், திருமானூர், நகர்/ஜெயங்கொண்டம், பெரம்பலூர், லப்பைக்குடிகாடு

நகல்: செயற்பொறியாளர்/இயக்கம்/230கி.வோ.து.மி.நி.ஈச்சங்காடு, பொய்யூர், பெரம்பலூர்

மேற்கண்ட பட்டய தொழில் பயிற்சி பழகுநர்களை உடனடியாக பணிவிடுப்பு செய்து அவர்களுக்கு மாற்றி வழங்கப்பட்ட பிரிவு அலுவலகங்களில் கணக்கீட்டு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

// உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

நிர்வாக அலுவலர்
பெரம்பலூர் மின்பகிமான வட்டம்
பெரம்பலூர்

★★★

# TNEBREOS கடிதம்

பெறுநர்: நாள் : 28.11.2024

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை-600 002.

ஐயா,

**பொருள் : TNEB REOS மாநில செயற்குழு கூட்டம் - தீர்மானங்கள் தொடர்பாக.**

TNEB REOS மாநில செயற்குழு கூட்டம் மதுரை கூடலழகர் கோவில் சன்னதி, மூலா. சுந்தர்ராஜபாகவதர் சத்திரத்தில் 23.11.2024 காலை 10.00 மணிக்கு மாநிலத் தலைவர் A. அருணாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை தக்க மேல்நடவடிக்கைக்காக தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

**தீர்மானங்கள்**

1. **அகவிலைப்படி உயர்வு பணியில் இருப்பவர்களுடன் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும் தீபாவளிக்கு முன்பாக நிலுவைத் தொகையுடன் வழங்கியதற்கு மின்சார வாரிய தலைவர் அவர்களுக்கு இச்செயற்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.**
2. **புதிய ஓய்வூதிய திட்டத்தினை ரத்து செய்து, பழைய ஓய்வூதிய திட்டத்தினை நடைமுறைப்படுத்திட தமிழ்நாடு அரசை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
3. **ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்களின் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மருத்துவ செலவுக்கான பட்டியல்கள் மற்றும் கலந்தாய்வு கூட்டங்களில் Board என பரிந்துரை செய்யப்பட்டு தணிக்கை கிளையில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மருத்துவ செலவுக்கான பட்டியல்களை மேலும் காலதாமதம் செய்யாமல் பணப்பட்டுவாடா செய்ய மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
4. **இறந்த ஓய்வூதியர்களின் வாரிசுகளுக்கு வழங்க வேண்டிய குடும்ப பாதுகாப்பு நிதி காலதாமதம் இன்றி வழங்க மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
5. **01.12.2019 முதல் 31.05.2023 வரை பணி ஓய்வு பெற்றவர்களுக்கும் பணியில் இருக்கும் பொழுது இறந்த பணியாளரின் வாரிசுகளுக்கும் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு நிலுவைத் தொகை முதல் மற்றும் 2வது தவணை வழங்காதவர்களுக்கு விரைந்து வழங்க மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
6. **2022-2023, 2023-2024ம் ஆண்டுகளுக்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை போனஸ் பெற தகுதியுள்ள பணி ஓய்வு பெற்றவர்களில் போனஸ் வழங்காமல் இருப்பவர்களுக்கு ERP-யில் உள்ள சில தவறுகளை சரிசெய்து உடனடியாக வழங்கவும் இனிவரும் காலங்களில் பணி ஓய்வு பெற்றவர்களுக்கும் தீபாவளி பண்டிகைக்கு முன்பாக போனஸ் தொகை வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
7. **பணி ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வுக்கால பணப்பலன்கள் அனைத்தும் கடந்த காலங்களில் வழங்கியது போன்று ஓய்வு பெறுகின்ற அன்றே வழங்கிட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

8. மண்டல அளவில் ஓய்வூதியர்கள் குறை களைவு கூட்டம் நடைபெறுவது போன்று வாரிய மட்டத்திலும் ஓய்வூதியர் குறை களைவு குழு அமைத்து ஓய்வூதியர்களின் குறைகளை களைவதற்கான கூட்டம் நடத்திட வேண்டி மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

9. புதிய ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்களுக்கு மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டையினை தணிக்கை கிளையிலிருந்து ஓய்வூதிய கொடுப்பாணை (PPO) வழங்கும் பொழுது அவர்கள் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்க மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

10. தந்தை, தாயை இழந்த திருமணமாகாத மகள், விதவை மகள், விவாகரத்தான மகள், மாற்றுத் திறனாளிகளுக்கு தொடர்ந்து குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் வழங்க வருடா வருடம் வட்டாட்சியர் அலுவலகத்தில்ங பெற வேண்டிய சான்றுகள் (விதவை, வருமானம், வேலையின்மை சான்றுகள்) பெறுவதில் உள்ள சிரமங்களை கணக்கில் கொண்டு இதற்கு விதி விலக்கு வழங்கி குடும்ப ஓய்வூதியர்களைப் போன்று ஓய்வூதியம் வழங்க மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

11. தந்தை, தாயை இழந்த திருமணமாகாத, விதவை, விவாகரத்தான மகள்களுக்கு வழங்கப்பட்டு வந்த குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம், தந்தையின் இறப்பிற்கு பின்னர் விதவையான, விவாகரத்தான மகள்களுக்கு நிறுத்தப்பட்டுள்ள குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியத்தினை மீண்டும் வழங்க தமிழ்நாடு அரசையும், மின்சார வாரியத்தையும் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

12. ஓய்வூதியர்/குடும்ப ஓய்வூதியர்களுக்கு 65, 70, 75 வயது நிறைவு பெற்றவர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் வழங்க தமிழ்நாடு அரசை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

13. ஓய்வூதியர்களது கமுட்டேசன் தொகை பிடித்தம் செய்வது 15 வருடம் என்றிருப்பதை 12 வருடமாக குறைத்து பிடித்தம் செய்ய தமிழ்நாடு அரசை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

14. மிகவும் குறைந்த எண்ணிக்கையில் உள்ள கருணைத் தொகை (Ex-Gratia) பெறுபவர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ. 7,850 + DA வழங்க தமிழ்நாடு அரசை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

15. ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்களின் மருத்துவ செலவுக்கான முழு தொகையினையும், மருத்துவ காப்பீட்டு நிறுவனம் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

16. ஓய்வூதியர், குடும்ப ஓய்வூதியர் கருணைத் தொகை பெறுபவர்கள் IOB வங்கி, தபால் ஆபீஸ், இ-சேவை மையம் இவைகளில் நேரடியாக சென்று ஆதார் அடையாள அட்டை, வங்கி பாஸ்புக் கொடுத்து உயிர்வாழ் சான்று சமர்ப்பித்த பின்னர் ஆதார் எண் பொருந்தவில்லை என்று தணிக்கை கிளையில் நிராகரிப்பு செய்யாமல் உயிர்வாழ் சான்றினை ஏற்றுக் கொள்ள மின்சார வாரியத்தினை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

17. குடும்ப ஓய்வூதியர்களுக்கு மருத்துவ காப்பீட்டு திட்டம் அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கான தொகை பிடித்தம் செய்ய மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

தங்கள் உண்மையுள்ள

**(P. சுடலை)**

பொதுச்செயலாளர்/TNEBREOS

# வாரிசு வேலை தொடர்பான உத்தரவு

**Tamil Nadu Power Distribution Corporation Limited**

**(ABSTRACT)**

Compassionate Appointment - Delegation of Powers to the concerned Superintending Engineers - To examine and appoint the legal heirs of the deceased / Medically Invalidated employees under Compassionate grounds - Orders - Issued.

---

**(Adminsitrative Branch)**

**(Per.) CMD TNPDCL Proceedings No. 17** **Dated 23.09.2024**
Puratasi 07, Khrothi Varudam,
Thiruvalluavar Aandu - 2055.

**READ:-**

(Per.) FB TANGEDCO Proceedings No. 11 (Administrative Branch), dated 11.06.2020.

**PROCEEDINGS:**

The applications for appointment under compassionate grounds to the legal heirs of deceased / Medically Invalidated employees are processed and orders are issued by the Chief Engineers/Personnel. On an average 600 to 700 applications are received through the concerned Superintending Engineer every year.

2) Representations for quick disposal of applications are received often. Invariably all the unions emphasized the need for quick disposal of the applications to give appointent orders to the legal heirs during the meetings chaired by the Chairman-cum-Managing Director.

3) The appoitnent for legal heirs is to be given to the initial level posts of Class III & IV services. The Superintending Engineer is the appointing authority for Class III & IV services.

4) Upon considering the request of unions, it has been ordered to delegate the powers of compassionate appointment of legal heirs of the deceased/Medically invalidated employees to the Superintending Engineers concerned.

5) Accordingly, all the Superintending Engineers concerned are requested to receive, process and appoint the legal heirs of the deceased/Medically Invalidated employees strictly following Board rules and (Per.) FB TANGEDCO Proceedings No. 11 (Administrative Branch), dated 11.06.2020.

6) Also, if the vacant post is not available in the concerned Circle/EDC, the fact may be intimated to the Chief Engineer/Personnel for positing the applicant in the vacancy of other region, For time being, irrespective of vacancy no appointment shall be made in the post of Junior Assistant / Administration and instead they shall be appointed as Assessor.

7) The compassionate appointment proposal shall not be sent to the Chief Engineer/Personnel from the date of issue of this Order.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR/TNPDCL)**

**Chief Engineer/Personnel**

# வாரிசு வேலை தொடர்பான உத்தரவு

**TAMIL NADU POWER DISTRIBUTION CORPORATION LTD.,**
**(Erstwhile TANGEDCO)**
**ADMINISTRATIVE BRANCH**

N.P.K.R.R. MAALIGAI,
144, Anna Salai,
Chennai - 600 002.

**Circular Memo No. 053867/G24/G.24(1)/2024-2, Dated : 14.11.2024**

***Sub :*** TNPDCL - Compassionate Grounds - To examine the applications of legal heir of the deceased employee without waiting for sanction of terminal benefits - Instructions - Issued.

***Ref :*** Minutes of State level distribution Review Meeting held by CMD/TNPDCL on 24.09.2024.

*****

All the Chief Engineers and Superintending Engineers are instructed to examine the proposal of the eligible legal heir of the deceased employee once received in complete shape, as per (Per.) FB TANGEDCO Proceedings No. 11 (Administrative Branch) dated 11.06.2020, without waiting for sanctioning the terminal benefits.

**M. SUDARSAN**
Chief Engineer/Personnel

# 2023-2024ஆம் ஆண்டிற்கான போனஸ் - உத்தரவு

**Tamil Nadu Power Distribution Corporation Limited**
**(Erstwhile TANGEDCO)**

**(ABSTRACT)**

TNPDCL - Bonus and Ex-gratia to Workmen of Tamilnadu Power Distribution Corporation Limited (TNPDCL), Tamilnadu Power Generation Corporation Limited (TNPGCL), Tamilnadu Green Energy Corporation Limited (TNGECL) and Tamilnadu Transmission Corporation (TANTRANSCO) for the year 2023-2024 - Orders - Issued.

---

**(Secretariat Branch)**

**(Per.) FB TNPDCL Proceedings No. 03** **Dated 21st October 2024**
Kurothi Aandu - Iyppasi-4,
Thiruvalluavar Aandu - 2055.

**READ:-**

1. (Per) FB TANGEDCO Proceedings No. 13 (SB), dated : 24.05.2023
2. G.O.Ms.No. 310, Finance (BPE) Department, Dated : 14.10.2024.

**PROCEEDINGS:**

In the Government Order second read above, the Government have accorded sanction for payment of Bonus and Ex-gratia to the employees of the State Public Sector Undertakings.

2. In pursuance of the above Government Order, it is hereby ordered that the Workmen of the Tamilnadu Power Distribution Corporation Limited (TNPDCL), Tamilnadu Power Generation Corporation Limited (TNPGCL), Tamilnadu Green Energy Corporation Limited (TNGECL) and Tamilnadu Transmission Corporation (TANTRANSCO) covered by the Wage Settlement (Class III and IV), be paid a Bonus calculated at the rate of 8.33% of the salary (or) wage earned by them during the financial year 2023-2024, subject to and in accordance with the provisions of the Payment of Bonus Act, 1965 and as amended under the revised Bonus Act, 2015.

3. The workmen of the Tamilnadu Power Distribution Corporation Limited (TNPDCL), Tamilnadu Power Generatiopn Corporation Limited (TNPGCL), Tamilnadu Green Energy Corporation Limited (TNGECL) and Tamilnadu Transmission Corporation (TANTRANSCO) (monthly paid and full-time workmen), Field Assistant (Trainees), Office Helper (Trainees), Assessors (Trainees), Gangman appointed with time scale of pay, Gangman (Trainees) drawing consolidated wages and also the workmen of the State Government, Central Government and other organisation, who had worked with Board on deputation during the financial year 2023-2024 drawing a salary (or) wage, including those drawing pay exceeding Rs. 21,000/- per month, will be eligible for the Bonus sanctioned in para-2 above.

4. The Part-time Sweepers and Sanitary workers who are getting the time scale of pay during the financial year 2023-2024, drawing the salary (or) wage, are also eligible for the Bonus sanctioned in para-2 above.

5. It is also ordered that the workmen of the Tamilnadu Power Distribution Corporation Limited/(TNPDCL), Tamilnadu Power Generatiopn Corporation Limited (TNPGCL), Tamilnadu Green Energy Corporation Limited (TNGECL) and Tamilnadu Transmission Corporation (TANTRANSCO) covered by the Wage Settlement (Class III and IV) and the deputationisits, entitled to get Bonus with reference to the orders in paras 2, 3 and 4 above, shall also be paid an Ex-gratia at the rate of 11.67% of the salary (or) wage earned by them, during the financial year 2023-2024.

6. Further, where the salary (or) wage of a workman entitled to Bonus exceeds Rs. 7,000/- (Rupees Seven thousand only) per mensem, the Bonus payable to such workman shall be calculated as if his salary (or) wage is Rs. 7,000/- (Rupees Seven thousand only). The maximum Bonus amount payable shall be Rs. 6,997/- (Rupees Six thousand Nine hundred and ninety seven only).

7. Salary (or) wage for the purpose of payment of Bonus will include the following:-

(a) Basic Pay-Leave Salary;
(b) Dearness Pay;
(c) All classes of special pay (including Short hand and Typewriting Special Pay);
(d) Personal Pay;
(e) Additional Pay for additional charge;

(f) Additional day wage paid for work on National Holidays and Festival Holidays;
(g) Dearness Allowance;
(h) Personal Compensatory Allowance given for protecting loss of pay; and
(i) Deputation Allowance.

The term 'Salary' or 'Wage' will not include Interim Relief, over-time pay and allowances and any pay and allowance other than those mentioned from (a) to (i) above.

8. All the workmen, who had worked in the establishment for not less than thirty working days in the financial year 2023-2024, are entitled to the payment of Bonus.

9. The Ex-gratia amount payable shall be Rs. 9,803/- (Rupees Nine thousand Eight hundred and three only). This Ex-gratia will be reduced on actual basis if a workman had not worked on all the working days in the financial year 2023-2024 as per the provisions of Section 13 of the Payment of Bonus Act, 1965 and as ameneded in Revised Bonus Act, 2015.

10. The Bonus and Ex-gratia payable to Workman shall also be calculated, as if his-her salary (or) wage is Rs. 7,000/- (Rupees Seven thousand only) per mensem. Under this method, the Bonus and Ex-gratia amount payable shall be Rs. 6,997/- and Rs. 9,803/- respectively. The Bonus and Ex-gratia payable to a Workman shall not exceed Rs. 16,800/- (Rupees Sixteen thousand and EIght hundred only) for the full year.

11. The Tamilnadu Power Distribution Corporation Limited (TNPDCL) (erstwhile TANGEDCO) also directs that the workman, whos is now under suspension, but was on duety during the financial year 2023-2024, also be paid Bonus for the year 2023-2024 subject to the conditions mentioned above.

12. If, during any part of the financial year 2023-2024, a workman covered by the Wage Settlement was promoted to officer category, he/she shall also be paid the Bonus in a proportionate manner for the period he/she had worked in the workmen category.

13. The workman covered by the Wage Settlement, who had worked in the financial year 2023-2024 fully (or) partly, but had retired (or) died susequently shall be paid the Bonus fully (or) prportionately, as the case may be to the legal heir of the deceased.

14. The expenditure on the payment of Bonus shall be debitable to the following head of account: "TNPDCL Funds - Revenue Expenses - Acount No. 4030130" and the expenditure on the payment of Ex-gratia shall be debitable to "Account No. 4030131".

15. The Tamilnadu Power Distribution Corporation Limited (TNPDCL) (erstwhile TANGEDCO) also directs that the Bonus payment for the year 2023-2024 payable during 2024-2024 should be disbursed by cashless mode of Electronic Clearance System (ECS) to all the eligible employees of Tamilnadu Power Distribution Corporation Limited (TNPDCL), Tamilnadu Power Generation Corporation Limited (TNPGCL), Tamilnadu Green Energy Corporation Limited (TNGECL) and Tamilnadu Transmission Corporation (TANTRANSCO) on 2310.2024.

**(BY ORDER OF THE BOARD)**

**K. NATHAKUMAR**
Chairman and Managing Director

# விபத்து - மருத்துவ செலவு - வாரியத்தின் செலவு

அனுப்புநர்
பொறிஞர் **V. கருப்பையா**, பி.இ.,
செயற்பொறியாளர்,
பகிர்மானம்
வத்தலக்குண்டு

பெறுநர்
**மருத்துவ கண்காணிப்பாளர்**
(Medical Superintendent)
கிரேஸ் கெனட் பவுண்டேசன்
ஆஸ்பிடல்
8, கெனட் ரோடு, மதுரை-625016

**க.எண்:செபொ/ப/வ.கு/நிபி/உ.1/கோ./அ.எண்: 2304/2024 நாள்: 05.12.2024**

ஐயா,

**பொருள்** : **நிர்வாகம் - 4ம் நிலை பணியாளர் - திரு. K. கருப்பசாமி, கேங்மேன்/நகர்/மேற்கு/கொடைக்கானல் மற்றும் திரு. D. உதயகுமார், கேங்மேன்/நகர்/மேற்கு/கொடைக்கானல் அவர்கள் 04.12.2024 அன்று வாரியப்பணி செய்யும்போது விபத்து ஏற்பட்டு தங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால் தொடர் சிகிச்சை மேற்கொள்ள செலவுத் தொகை செலுத்துவது - தொடர்பாக.**

**பார்வை** :
1. **TNEB Secretariat Branch/Chennai Memo No. (Per) No. 5445289/A17/A172/13-1, Dt: 2308.2013.**
2. **Memo No. (Per) 32983/A17/A171/2019-1 Dt: 24.06.2019.**

****

திரு. K. கருப்பசாமி, கேங்மேன்/நகர்/மேற்கு/ கொடைக்கானல் மற்றும் திரு. D. உதயகுமார், கேங்மேன்/நகர்/மேற்கு/கொடைக்கானல் அவர்கள் 04.12.2024 அன்று காலை 10.25 மணியளவில் கொடைக்கானல் பகுதியில் உயர் மின்அழுத்த பாதையை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டபோது மின் அதிர்ச்சிக்கு உள்ளாகி மின்விபத்து ஏற்பட்டு கீழே விழுந்துவிட்டனர். பலத்த காயங்கள் ஏற்பட்ட அவர்களை கடந்த 04.12.2024 அன்று தங்களது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களின் சிகிச்சைக்கு மருத்துவ செலவு தொகையை பணியாளர்களிடம் பெற வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் United India Insurance Company (Medi Asst) மருத்துவ காப்பீட்டு கழகத்தில் அனுமதிக்கப்படும் தொகை போக கூடுதலாகும் மருத்துவ செலவை பார்வையில் காணும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலமாக ஈடுகட்டப்படும் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செயற்பொறியாளர்**
பகிர்மானம்
வத்தலக்குண்டு

# ஊதிய முரண்பாடு - திருத்தம் குழு அமைத்து உத்தரவு

**Tamil Nadu Power Distribution Corporation Limited**
**(TNPDCL)**

**(ABSTRACT)**

Establishment - TNPDCL - Class - I & II Service - Scructinization of the pay anomaly and pay re-fixation proposals - Constitution of a Committee - Orders - Issued.

---

**(Secretariat Branch)**

**(Per.) CMD TNPDCL Proceedings No. 52** **Dated 6th December 2024**
Karthigai-21
Thiruvalluavar Aandu - 2055.

**READ:-**

1. Board's Memo. No. 027939-C1/88-1, (SB) dated 08.05.1988
2. B.P.Ms. (Ch) No. 162 (SB) dated 10.06.1988
3. (Per) B.P (Ch) No. 119 (SB) dated 18.05.1993
4. Board's Memo. No. 30229/A4/A41/2018-1, dated 23.05.2018.
5. Board's Memo. No. 56545/A4/A41/2019-1, dated 22.01.2020.

*****

**PROCEEDINGS:**

In the Board's Memorandum first read above, the conditions for rectification of pay anomaly and the circumstances where the pay anomaly could not be recctified have been prescribed. In the reference second read above, earlier a Pay anomaly committee was constituted to study the case of rectification of pay anomaly dealt with at the Head quarters level and subsequently as per the Board's Proceedings third read above the said committee was abolished and the Competent Authorities to order for rectification of pay anomaly were also prescribed from Class I to Class IV Officials/Employees.

2. In the Board's Memorandum fourth read above, Instructions were issued for submission of the pay anomaly proposals by the Officers/Employees including the retired persons in a complete shape with required particulars, since the pay anomaly proposals were received from the field offices without proper scrutinisation and with relevant particulars. Further, in the Board's Memorandum fifth read above, instructions were issued to furnish the pay anomaly proposals in a new format with individual application and comparative statement as prescribed by the Government, so as to verify the correctness of the pay particulars.

3. Of late, it is observed that pay anomaly is being claimed by the Officers/Employees for 10 to 15 years back period, even by the retired officials, since there is no time limit prescribed for claimbing pay anomaly and also it is observed that Thousands/Lakh of rupees are being claimed as arrears and paid to each individual, which involved additional financial commitment to the Corporation. In view of the involvement of huge financial commitment, it has been suggested to constitute a Committee comprising of the Members from the Accounts Branch, Secretariat Branch, Administrative Branch and Audit Branch to analyze the pay anomaly and pay re-fixation proposals in respect of Class I and II Officers submitted by the Secretariat Branch and to recommend to the Competent Authority for sanction and also to fix a timeline for submission of pay anomaly proposals. The suggestion has been accepted and approved by the Chairman and Managing Director/TNPDCL.

4. Accordingly, it is hereby ordered that a Committee be constituted comprising the following Members to analyse the Pay anomaly and pay re-fixation proposals in respect of Class I and II Officers of Tamil Nadu Power Distribution Corporation Limited, Tamil Nadu Power Generation Corporation Limited, Tamil Nadu Green Energy Corporation Limited and Tamil Nadu Transmission Corporation Limited and to recommend to the Competent Authority for consideration:-

1. Financial Controller/Cost/Accounts Branch
2. Deputy Secretary/Personnel/Secretariat Branch
3. Senior Deputy Chief Internal Audit Officer/Pension/Audit Branch
4. Senior Personnel Officer/Recruitment/Administrative Branch.

The Under Secretary/Wage Revision & Regulations, Secretariat Branch shall be the convener of the committee. The committee meeting shall be convened once in a week on the date convenient to the Members of the Committe, so as to analyze the proposals on an ongoing basis. The recommendation of the Committee will be placed before the Competent Authority concerned for approval. The Committee shall also study and recommend a time line for submission of pay anomaly proposals by the Officers/Employees.

**K. NANTHAKUMAR**
Chairman and Managing Director

## மேட்டூர் பணிமனை, "வீழுமா" இல்லை "மீளுமா"

தமிழ்நாட்டு மக்களின் நீர் ஆதாரமாக இருந்து வரும் மேட்டூர் அணை ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டு இன்று வரை தமிழ்நாட்டின் மூலாதாரமாக இருந்து வருகிறது, இந்த மேட்டூர் அணையின் கட்டுமான பணிகளுக்காக உருவாக்கப்பட்டதுதான் மேட்டூர் பணிமனை, அணை கட்டுமானத்திற்கு பிறகு பொது பணித்துறையில் இயங்கி வந்த பணிமனையை மின்சாரத் துறைக்கு மாற்றப்பட்டு, மேட்டூர் அணை மின்நிலைய கட்டுமான பணிகளுக்கு பயன்படுத்தப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க ஒரு தொழிற்கூடமாக இருந்து வந்தது மேட்டூர் பணிமனை.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்க்கு தேவையான மின்கோபுரங்களை உற்பத்தி செய்து தமிழகமெங்கும் மின்சாரத்தினை கொண்டு செல்லும் பணியினை தன்னிறைவு காணச் செய்ததில் பெரும் பங்கு வகித்தது மேட்டூர் பணிமனை ஆகும். பின்னர் மின்சார வாரியத்தின் அன்றாட மின் விரிவாக்கப் பணிகளுக்காகவும், பகிர்மான பணிகளுக்காகவும் தேவையான மின் தளவாடப்பொருட்கள் அனைத்தையும் தேவையான அளவிற்க்கு உற்பத்தி செய்து தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் ஒரு பெரிய தொழிற்சாலையாக உற்பத்தி பணிகளை செய்து வரலாறு படைத்த பெருமைக்குரியது மேட்டூர் பணிமனை ஆகும்.

௪00க்கும் அதிகமான தொழிலாளர்களுடன் இந்த பணிமனை இயங்கி வந்த நிலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமை பணிமனையாக இருந்தது, இதனுடன் திருநெல்வேலி மாவட்டத்தில் தாழையூத்து பணிமனை, மதுரை மாவட்டத்தில் சமயநல்லூர் பணிமனை, கோவை மாவட்டத்தில் கோவை பணிமனை, வேலூர் மாவட்டத்தில் வேலூர் பணிமனை, சென்னை மாவட்டத்தில் மைலாப்பூர் பணிமனை ஆகியவைகள் சிறிய அளவு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்ட நிலையில் மேட்டூர் பணிமனை மிகப் பெரிய உற்பத்தி கேந்திரமாக இருந்தது வரலாறு.

பெரும் புயல் மற்றும் மழை வெள்ள காலங்களிலும், இயற்கை பேரிடர் காலங்களிலும் அவசர காலங்களிலும் அபரிமிதமான உற்பத்தியினை சேவை மனப்பான்மையுடன் செய்து,மின் தளவாட பொருட்களை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு எடுத்து சென்று விநியோகம் செய்கின்ற கட்டமைப்பை பெற்றது மேட்டூர் பணிமனை ஆகும்.

மேலே குறிப்பிடபட்ட ஆறு பணிமனைகளிலும் பல்வேறு கால கட்டங்களில், பல்வேறு காரணங்களை கூறி அதன் உற்பத்தியினை செயற்கையாக முடக்கி அவைகளுக்கு மூடுவிழா நடத்தியபோது எதிர்ப்பு குரல்களின் ஓசை ஓங்கி ஒலித்தபோதும், தன்னிச்சையான முடிவுகளின் காரணமாக முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு அந்த பணிமனைகள் மூடப்பட்டன.

''ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசியாக மனிதனை கடிப்பது'' என்ற சொல்லாடலை உண்மையாக்கிட பெரிய உட்கட்டமைப்புகள் கொண்ட மேட்டூர் பணிமனையை காலப்போக்கில் நீர்த்துப் போக வைக்கும் வேலைகளை திட்டமிட்டு செய்து, இப்போது அதன் நிலையை கேள்விக்குறி ஆக்கியுள்ளார்கள்.

ஒரு தொழிற்சாலையின் உற்பத்திக்கு முக்கிய அடிப்படை தேவையாக இருப்பது மூலப்பொருட்கள், அந்த மூலப்பொருட்களை கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்காமல், தொழிலாளர்களையும், உற்பத்தி இயந்திரங்களையும், முறையாக பயன்படுத்தாமல், தேவையான பொருட்களை தனியாரிடம் கொள்முதல் செய்து பயன்படுத்தும் மின்வாரியத்தின் செயல்கள் கடுமையான கண்டனத்துக்குரியது.

மூலபொருட்களை கொள்முதல் செய்து ஒரு தொழிற்சாலையையும் அதன் உற்பத்தியையும், அதன் தொழிலாளர்களையும், ஒரு நல்ல நிர்வாகத்தால் பாதுகாக்க முடியும் என்பதற்கு பல்வேறு தொழிற்சாலைகள் உதாரணமாக இருக்கும் நிலையில் ஒரு நல்ல தொழிற்சாலையினை இப்படி செயலிழக்கச் செய்யும் செயல் நியாயமா? நீதியா? நேர்மையானது தானா? என்று கேட்காமல் இருக்க முடியுமா?

தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்ட் எம்ப்ளாயிஸ் பெடரேசன் சங்கம் பல்வேறு காலகட்டங்களில் மேட்டூர் பணிமனைக்கு தேவையான மூலப்பொருட்களை வழங்கிட, பேச்சுவார்த்தைகள் நடத்தியும், மாநில செயற்குழுவில் அதன் தீர்மானங்களின் மூலம் கேட்டுக் கொண்டும், பணிமனை வட்ட எம்ப்ளாயீஸ் பெடரேசன் கிளையின் சார்பாக பல்வேறு களப்போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், வழியாக கோரிக்கைகளை முன்வைத்து தனி ஒரு சங்கமாக போராடியதை வரலாறு பதிவு செய்துள்ளது.

தற்போது மேட்டூர் பணிமனையில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களை அருகில் உள்ள இடங்களுக்கு தற்காலிக மாற்றம் (Temporary Diversion) செய்திட விவரம் கேட்டு வாரியம் மேட்டூர் பணிமனை மேற்பார்வை பொறியாளருக்கு கடிதம் எழுதியுள்ளது தொழிலாளர்களிடையே மிகுந்த மன உலைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

அருமையான உற்பத்தி இயந்திரங்களும், அபரிமிதமான தொழிற்சாலையின் இடங்களும் இனி எந்த முதலாளியின் கைகளில் அடிமாட்டு விலைக்கு அள்ளி வழங்கப்படுமோ என்பது மில்லியன் டாலர் கேள்வி.

என் கடன் தொழிலாளர்களுக்கான பணி செய்து கிடப்பதே என்பதற்கு இலக்கணமாக தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டிபோர்ட் எம்ப்ளாயீஸ் பெடரேசன் 07.12.2024 காலை அனைத்து தொழிலாளர்களையும் திரட்டி மிகப் பெரிய கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தி முதல் குரல் கொடுத்துள்ளது முக்கியமானது ஆகும்.

அதனை தொடர்ந்து மேட்டூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் மாண்புமிகு எஸ். சதாசிவம் அவர்களிடம் எம்ப்ளாயீஸ் பெடரேசன் சங்கத்தின் சார்பாக கோரிக்கை மனுவினை அளித்து மேட்டூர் பணிமனை தொழிலாளர்களின் தற்காலிக மாற்றத்தை ரத்து செய்து, தொடர்ந்து பணிமனை இயங்கிட ஆவன செய்திட முன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதையும் இங்கு முக்கிய நிகழ்வாக குறிப்பிட வேண்டும்.

**எஸ். புகழேந்தி சித்தராஜன்,** சேலம்
சங்க ஆலோசகர்/மேட்டூர் பணிமனை

## நெஞ்சம் பொறுக்குதிலையே இந்த நிலை கெட்ட மாந்தரை கண்டால்

**- மகாகவி பாரதி**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 60 ஆயிரம் காலிப்பணியிடங்கள் இருக்கும் பொழுது எல்லா பணிகளும் தங்கு தடையில்லாமல் நடக்க வேண்டும் என்று நிர்வாகம் கொடுக்கும் அழுத்தத்தால் வெளிஆட்களை (ஒப்பந்த தொழிலாளிகள்) கொண்டு அனைத்து பணிகளையும் முடித்து விடுகின்றோம் எப்படி? ஆள் பற்றாக்குறை உள்ளபோது தங்கு தடையில்லாமல் பணிகள் நடைபெறுகிறது என்றால் இப்படிதான் நடக்கிறது என்று நிர்வாகத்திற்கு தெரியாதா?

வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளிகள் இல்லை என்று மாதந்தோறும் உறுதிமொழி கொடுக்கும் நிர்வாகம் இவர்கள் இல்லாமலா ஒவ்வொரு புயல் நேரத்திலும் பணிகள் நடைபெற்றது? ஓடு, ஓடு என்று விரட்டி விரட்டி பணிகள் செய்தோமே உங்களுக்கு தெரியாதா? எங்கோ எவனோ சாகின்றான் நமக்கென்ன என்ற ஏளன பார்வை தானே? உயிர் என்றால் எல்லோரும் ஒன்று தானே நிர்வாகமே உனக்கு தெரியாதா?

176 நாட்கள் கொரோனா முழு அடைப்பு காலத்தில் உயிர் பயத்தால் அனைவரும் வீடுகுளில் முடங்கி இருக்க மின்வாரிய ஊழியர்கள் மட்டும் மக்கள் வீடுகளில் முடங்கி உள்ளார்கள் என்று தடையில்லா மின்சாரம் வழங்கினோமே. நம்மை ஏற்கனவே ஆண்டவர்களுக்கு முன்களபணியாளர் களாக அறிவிக்க மனம் வரவில்லையே. எத்தனை பொறியாளர்கள் மற்றும் ஊழியர்கள் உயிர் இழந்தார்கள் கணக்கு தெரியுமா.

புயல் என்றால் ஒப்பந்த தொழிலாளி தேவை! புயல் பணிகள் நிறைவுற்றால் தேவையில்லை! மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வருகிறார்கள். நானும் உங்களில் ஒருவன் என்கிறார்கள் உங்களின் பணி அர்ப்பணிப்பு கண்டு வியக்கிறேன் என்கிறார்கள். விரைவில் அனைவரையும் பணிநிரந்தரம் செய்கிறேன் என்கிறார்கள் ஆனால், அனைத்தும் நிராசை ஆகிறது.

தினமும் ஒரு விபத்து கம்பியாளர், மின்பாதை ஆய்வாளர் மற்றும் கேங்மேன் உயிரிழப்பு தொடர்ந்து கொண்டே உள்ளது. மற்ற துறைகளை போல் இல்லை மின்சாரத்துறை விபத்து எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம் எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம். நாம் என்ன பாவம் செய்தோம் நமக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது. எல்லாம் விதி என்று எளிதில் கடந்து செல்ல முடியவில்லை.

18.12.2024 அன்று திருச்சி பெருநகர் வட்டத்தில் KK நகர் பிரிவில் பணி செய்த ஒப்பந்த தொழிலாளர்கள் 10 நபர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். அன்று நடந்த பணிக்கு முறையான $K_2$ agreement, அல்லது Chit agreement எதுவும் இல்லை அலுவலகத்தில் அனுமதி பெற்றார்களா என்று கூட தெரியவில்லை. மின்சாரத்தை நிறுத்திவிட்டதாக வாரிய ஊழியர் ஒருவரால் உறுதிபடுத்தப்பட்டது. பின் பாதுகாப்பு உபகரணமான எர்த்ராடு போடுவதற்கு கம்பத்தின் மேலே ஏறுகிறார் மற்றொருவர் கீழே வயரை பிடித்துகொண்டு இருக்கிறார். எர்த்ராடு பொருத்தும் போது மின்சாரம் தாக்கி இரண்டு பேரும் இறந்துவிட்டனர். அங்கு எப்படி மின்சாரம் வந்தது. இதற்கு யார் காரணம், யாருடைய தவறு, யாருடைய அலட்சியம். AEE, Spl.Gr.FM, FM, LI, WM யார் காரணம். நிர்வாகம் பதில் சொல்ல தயங்குகிறது.

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் ஒரே நிலைப்பாடுதான் உயிர் இழப்பிற்கு காரணம் யாரால் இருந்தாலும் சரி வாரிய விதிகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தலைமை பொறியாளர்/ திருச்சி மற்றும் மேற்பார்வை பொறியாளர் / அவர்களுக்கு கடிதம் கொடுத்தோம்.

இவர் வேண்டியவர், வேண்டாதவர் என்று பாகுபாடு இல்லை. நெற்றிக்கண் **திறப்பினும் குற்றம் குற்றமே** அதில் எந்த மாற்று கருத்தும் இல்லை.

கேங்மேன் இறந்து கொண்டுள்ளார்கள் என்று கூறினோம் இன்று ஒப்பந்த தொழிலாளிகள் இறந்துவிட்டனர். கேங்மேன் தோழர்களை காணவில்லையே ஏன் நமக்கும் அவருக்கும் என்ன உறவு என்ற எண்ணம். மின்சாரம் சார்ந்த பணிகள் செய்யும் அனைவரும் நம் தோழர்களே. இதில் யாருக்கு பிரச்சனை என்றாலும் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் குரல் கொடுக்கும் UTUC போராட தயங்காது என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

களியக்காவிளை காவல் அதிகாரி இறந்தார் தமிழக அரசு ரூபாய் 1 கோடி இழப்பீடு அளித்தது. தேவர் குருபூஜையில் காவல் அதிகாரி ஒருவர் இறந்தார். தமிழக அரசு ரூபாய் 25 இலட்சம் இழப்பீடு அளித்தது. மின்சார வாரியத்தில் பணியின்போது இறந்த மின்வாரிய ஒப்பந்த தொழிலாளிக்கு ரூபாய் 5 இலட்சம் இழப்பீடு, கள்ளச்சாராயம் குடித்து இறந்தால் கூட ரூபாய் 10 இலட்சம் இழப்பீடு, ஏன் இந்த பாரபட்சம், மின்சார வாரிய ஊழியர்களின் உயிர், உயிர் இல்லையா. ஒப்பந்த தொழிலாளர்களை பணி அமர்த்தும் வரை போராட்டம் தொடரும். நிர்வாகமே போராட தூண்டாதே.

நல்ல முடிவெடு போராட்டம் தொடரும்...

தோழமையுடன்

**இரா. சிவச்செல்வன்**

மாநிலச் செயலாளர், திருச்சி பெருநகர் மின்விநியோக வட்டம்

## FSFS 3,00,000/-த்திலிருந்து 5,00,000/- இலட்சமாக உயர்த்திய உத்தரவு

**TAMIL NADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**

**(ABSTRACT)**

Tamil Nadu Government Servants' Family Security Fund Scheme - Enhancement of lumpsum payment from Rs. 3,00,000/- to Rs. 5,00,000/- payable to the dependents in case of death of the Government Servants while in Service - Orders issued by the Government - Adoption in TNPDCL - Orders - Issued.

---

**(Secretariat Branch)**

**(Per.) FM TNPDCL Proceedings No. 8** **Dated th 20th December 2024**

Margazhi-5, Krothi Varudam,
Thiruvalluavar Aandu - 2055.

**READ:-**

1. G.O.Ms.No. 1515, Finance Department, dated : 03.12.1973
2. Board's Proceedings Ms. No. 1074 (SB), dated 03.07.1974
3. G.O.Ms. 101, Finance Department, dated 03.02.1975.
4. (Per) (FB) TANGEDCO Proceedings No. 24 (SB) dated 15.09.2016
5. G.O.(Ms) No. 197, Finance (Pension) Department, dated 01.09.2021.

*****

**PROCEEDINGS:**

The "Tamil Nadu Government Servants' Family Security Fund Scheme" was introduced by the Government of Tamil Nadu - vide Government order first read above. The subscriber's contribution under the scheme was initially fixed at Rs. 10/- p.m. and the lumpsum amount payable in case of death of the subscribers while in service, was fixed at Rs. 10,000/- Based on the said G.O., the Tamil Nadu Electricity Board had introduced

"TNEB Employees' Family Security Fund Scheme" vide Board's Proceedings second read above with effect from 01.07.1974.

2. Thereafter, the Government in G.O. third read above, had issued orders modifying the said scheme by reducing the subscription amount from Rs. 10/- to Rs. 1/- per month, while a sum of Rs. 10,000/- was paid to the families of the deceased employees and no payment was contemplated in the event of retirement. However, the TNEB (now TNPDCL) continues to allow the refund of subscription collected from the employees together whth interest to them at the time of their retirement, by collecting an additional quantum of subscription over and above the subscription amount fixed by the Government from time to time.

3. In the Proceedings fourth read above, orders have been issued enhancing the lumpsum amount payable to the families of deceased employees from Rs. 1,50,000/- to Rs. 3,00,000/- duly enhancing the subscription from Rs. 75/- to Rs. 150/- p.m. towards "TNEB Employees" Family Security Fund Scheme" with effect from 01.02.2016.

4. The Government in G.O. fifth read above, had issued orders enhancing the lumpsum amount payable to the dependents of the Government servants who die while in service under the Tamil Nadu Government Servants' Family Security Fund Scheme from Rs. 3,00,000/- to Rs. 5,00,000/- with effect from 01.09.2021, duly increasing the subscription amount from Rs. 60/- to Rs. 110/-.

5. While examing the feasibility of adoption of the said G.O. in Tamil Nadu Power Distribution Corporation Ltd (TNPDCL), it has been considered appropriate that the procedure being followed in Government, be followed in TNPDCL, so as to maintain uniformity. Therefore, certain proposals were placed before the Boartd of TNPDCL for its approval. The Board in its 126th Meeting held on 25.11.2024 has approved the said proposals.

6. Accordingly, it is hereby ordered that;

(1) On and from the date of issue of orders in TNPDCL (i.e. 20.12.2024), the scheme shall provide Death benefit alone, i.e. Rs. 5,00,000/- to the family of the deceased employee'

(2) The monthly subscription of the employees towards "TNEB Employees' Family Security Fund Scheme" is fixed at Rs. 110/- per month as fixed by the Government which shall commence from December 2024.

(3) The existring procedure of refund of subscription together with interest, is dispensed with, with effect from 20.12.2024. However, the subscription amount collected from the employees towards "TNEB Employees' Family Security Fund Scheme", over and above the subscription amount fixed by the Government right from the beginning of the scheme i.e. from 01.07.1974 (As shown in the Annexure to these Proceedings) alone shall be refunded to the employees with interest, at the time of their retirement;

**Note :** The interest shall be calculated @ 3.3% per anum (under simple interest) on the excess amount collected from 01.07.1974 to 31.08.1990 and @ 6.6% per annum (under simple interest) from 01.09.1990 till 30.11.2024 as the case may be.

7. All the Chief Engineers, Superintending Engineers and other officers are instructed to work out the accumulation of excess subscription amount collected from the employees based on the details provided in Annexure to these Proceedings, together with interest as on 30.11.2024 and to make necessary entries in the Service Registers of the emplyees concerned. The said amount shall be kept "Frozen" till the date of retirement of the employees. At the time of retirement, the Pension Sanctioning Authorities shall work out the interest @ 6.6% p.a. (under simple interest) on the Frozen amount, for the remaining period i.e. from 01.12.2024 till retirement and to sanction the same to the concerned employee.

8. All the other existing rules and instructions governing the "Tamil Nadu Electricity Board Employees' Family Security Fund Scheme" shall continue.

**(BY ORDER OF THE BOARD)**

**K. NANTHAKUMAR**
Chairman and Managing Director